உ

உதயகிரி நாதர் துணை.

மதுரை இ. ராம. குருசாமிக் கோனாரவர்கள்
திரட்டிய பூசாரிகள் குறி சொல்லும் புதிய

# கோடாங்கி மாலை

முதல் பாகம்.



மதுரை புதுமண்டபம் புத்தக சாலை

## குரு. இராமசாமிக் கோன்

அவர்களாற் றமது,

மதுரை வடக்குமாசி வீதி, குருசாமிக்கோனார் சந்து,

ஸ்ரீ ராமச்சந்திர விலாசம் பிரஸில்

பதிப்பிக்கப் பெற்றது.

1953 (காப்பி ரைட்

O-, 8.K
N53
114149

உ

பரமபதிதுணை.

## பூசாரிகளுக்கு வேண்டிய

# கோடாங்கி மாலை.

### விநாயகரை வரவழைத்தல்.

ஜோதிசிவஞான சுந்தரன்றன் பாலகனே
மூலாதாரத்தில் முளைத்தெழுந்த ஐங்கரனே
வல்லபையைத் தன்றுடையில் வைத்தபெருமானே
அறுமுகர்க்கு முன்னவனே யானைமுகத்தோனே
சரிந்தவயிற்றோனே தற்பரனே யிப்போது
இலைபாக்குவைத்தகுறி இன்னதென்று சொல்லுதற்கு
மலையாதென்னாவில் வாக்கருள வேணுமையா
என்பிறவி வைத்தகுறிக் கிப்போது நீயிருந்து
குறிமுகத்தில் நின்று குறிப்பறியச் செய்யுமையா.

### சுப்பிரமணியரை வரவழைத்தல்.

தீராவினை தீர்க்குந் திருப்பரங்குன் றதிபனே
மாறாதெனக்கு வாக்கருள வேணுமையா
தெய்வப்பிடிமணந்த தேவேயுமையீன்ற
சைவக்கொழுந்தே சடாட்சரமே அந்நாளிற்
வனக்குறவர் பார்க்க வள்ளிதனையெடுத்து
செந்தூரில்வைத்து திருக்கலியாணம்புரிந்தாய்
சூரர்களைக்கொன்று சுந்தரர்க்குப் பாலகனாய்
சரவணப் பொய்கையினிற் றான்பிறந்து வந்தோனே
பக்தருக்குமந்திரம் பலகோடி தான்செபித்து
உற்றவர்க்குச் சிக்குகளை ஓட்டிவிட்டவல்லவனே
கேட்டகுறிக்குக் கிருபைவைத்துச் சொல்லுமையா

### சரஸ்வதியை வரவழைத்தல்.

வாணி சரஸ்வதியே வாக்குதவ வேணுமம்மா
நாவுதவருமல் நானிலத்தோ ரேசாமல்
வாக்குக்கொடுத்த மாயோன் மருமகளே
வெள்ளைக்கலையாளே விமலி சரஸ்வதியே
உள்ளத்திருந்து உதவிசெய்ய வேணுமம்மா
வேதன் மனையாளே வேதாந்த நாயகியே
பாலன் மயங்காமல் பட்சமுடன் வாக்கருள்வாய்
ஆசான் மனமகிழ அன்பாக இப்போது
இலைபாக்கு வைத்தகுறி இயல்பாகச் சொல்லுமம்மா.

### மகாவிஷ்ணுவை வரவழைத்தல்.

திருப்பாற் கடலைவிட்டுத் திருமாலாய் வந்தமர்ந்து
கூடலழகரென்றும் கோவிந்தமூலமென்றும்
ஸ்ரீரெங்கநாதரென்றும் திருவேங்கிட வாசனென்றும்
மாயாவினோதனென்றும் மாயாவதாரனென்றும்
கள்ளழகரென்றும் கரியமாணிக்கமென்றும்
பத்மநாபனென்றும் பண்பாய்ப் பெயர்படைத்த
பெரிய பெருமாளே பிள்ளைமயங்காமல்
உரியகுறியை உரைத்தருள வேணுமையா

### இலட்சுமியை வரவழைத்தல்.

மகாவிஷ்ணுவுக்கு மனையாளாய்த் தானிருந்தாய்
இராமாவதாரத்தில் இயல்சீதை யாகவந்தாய்
கிருஷ்ணாவதாரத்தில் கெம்பீர மானதொரு
உருக்குமணியா யுலகத்தில் வந்துதித்தாய்
பாக்கியவதியே பண்புள்ள லட்சுமியே
வாக்குக்கொடுத்து மனமகிழ்ச்சி செய்துவைப்பாய்
இந்தக்குறிக்கு இயல்பாயென் னுவிருந்து
வந்தகுறியை மயங்காமல் சொல்லுமம்மா
குழந்தை மயங்காமல் குறிமுகத்தில் வந்துநின்று
எல்லாவிஷயமும் இயல்பா யெடுத்துரைப்பாய்

சுந்தரேஸ்பரரை வரவழைத்தல்.

மந்திர கிரியென்னு மகாமேரு தானிருந்து
சுந்தரமாய் மதுரைச் சொக்கராய் வந்தபின்பு
கடம்பவன லிங்கங் கலியாண சுந்தரமாய்
மகாலிங்க நாதரென வந்துதித்துப் பின்புநல்ல
மீனுக்ஷி தேவியையும் வேண்டி மணம்புரிந்தாய்
சீர்பெருகும் மச்சகன்னி தேவியார் தங்களுக்கு
பார்புகழ அட்டசித்தி பண்பாகவேதானும்
உபதேசஞ்செய்த உற்றசுந்த ரேஸ்பரரே
குறிமுகத்தில் வந்திருந்து கொண்டணைத்து யிப்போது
பாலன்மயங்காமல் பண்பாக வாக்கருள்வாய்

மீனுக்ஷியம்மனை வரவழைத் தல்.

மதுரை மீனுக்ஷியென வந்துபிறந்தவளே
பாண்டிமாதேவி பட்டத் தரசியம்மா
வேண்டி யுனைப்பணிந்தேன் மீனுட்சி சுந்தரியே
பார்வதித் தாயே பரமேஸ் வரியாளே
சிவகாமி யானவளே தேவி பராபரையே
நித்தியகல் யாணியென நேர்மையுடன் பேறுபெற்றாய்
பாலன் மயங்காமல் பரிவாக யிப்போது
குறிமுகத்தில்நின்று குதூகலமாய்ச் சொல்லுமம்மா
அனுதினமு முன்னை அன்பாகப் போற்றிசெய்தேன்
மனதிலுரைந்து வாக்குக் கொடுத்தருள்வாய்

சதுரகிரி சுந்தரமகாலிங்கத்தை வரவழைத்தல்.

சித்தர்கள் வாழுஞ் சஞ்சீவியுள்ள சிறந்த சதுகிரி
மலையடிவாரம்தாம ரைபொய்கைமாவூற்றெனுந்தலத்தில்
உத்தமர் பூசிக்கும் உகந்த உதயகிரி
சுந்தர மகாலிங்கம் சோதிமய மானலிங்கம்
சந்தன மகாலிங்கம் சகலரைக்காப் பாற்றுலிங்கம்
இரட்டை மகாலிங்கம் எங்கும் நிறைந்த லிங்கம்

ஆனந்தவள்ளி அருள் தருகும் சத்தக்கன்னி
சதுரகிரி மாவூற்றில் தங்கும் சடாதாரி
வனதேவதையோடு வாதாடும் பேச்சியம்மா
இத்தனை தேவதைக்கும் இயல்பாக வேதானும்
காவல் பதனமதாய்க் கார்த்தபலாவடியான்
உன்பாதந் தஞ்சமென் றேன் உகந்துவைத்த மாகுறிக்கு
விபாமதைச் சொல்ல வேண்டுமையா யிப்போது

நவக்கிரகங்களை வரவழைத்தல்.

உலகந் தனக்கு ஒருபொருளாய்த் தானிருந்து
சகலரையுங் கார்த்து சவரெட் சனைபுரியும்
சூரியபகவானே துலங்கும் பாராபரனே
சந்திரபகவானே சகலரையுங் கார்ப்பவனே
செவ்வாய் பகவானே சீர்சிறந்த புண்ணியனே
புதனும் பகவானே புண்யபுருடோத்தமனே
வியாழ பகவானே வேண்டுவரந் தந்தவனே
சுக்கிர பகவானே சுகங்கொடுக்கும் வல்லவனே
சனிப்பகவா னென சர்வலோகாதிபனே
இராகுகேது வென்றும் இருக்கும் பகவானே
ஒன்பதுபேர்களையும் உகந்து வணங்கினேனுன்
வாக்குதனி லிருந்து மனமகிழ்வு செய்துவைப்பாய்

அநுமானை வரவழைத்தல்.

அஞ்சனுதேவி யருமையுடன் பெற்றெடுத்த
அநுமானே யிப்போது அருள்புரிய வேணுமையா
இராமதூத னுகி இலங்கை தனிலேகி
அசாக வனத்தி லன்பாகச் சீதையிடம்
கணையாழி தான்கொடுத்து காட்சிகளைக் கண்டுகந்து
இலங்கை யரசாண்ட இராவணன்றன் முன்பேசி
சபதங்கள் போட்டுத் தன்வாலிற் றீக்கொழுத்தி
இலங்கையைச் சுட்டுவந்த இராமதூத னேவாவா
ஆசான்குறிக்கு அருள்புரிய வேணுமையா
குறிமுகத்தில்வந்து கோமானே வாக்கருள்வாய்

## அகோர வீரபத்திர சுவாமியை வரவழைத்தல்·

தக்கனுட வேள்வி தானழிக்க வேநினைத்து
வீரபத் திரனுக மேதினியி லுற்பவித்து
கடுந்தவசைப் போயழிக்க கண்டப்போ தக்கனுந்தான்
வெகுகோப மூண்டாகி வீரபத்திர னேடெதிர்க்க
கண்டந்த வீரபத்திரன் கடுங்கோப மூண்டாகி
அகோரவீர பத்திரனென அனேககைக ளுண்டாக்கி
மின்னிரவி பற்றகர்த்து வெய்யசுரர் கையறுத்து
தன்னையிகழ் தக்கன் தலையறுத்து பின்னாயன்
வாழ்வி புதரோடவென்ற மால்புரமிட் டோடவுந்தி
வேழ்வி தனையழித்த வீரபத்திரா யிப்போது
குறிமுகத்தில் வந்திருந்து கொண்டாட எல்லோரும்
சொரூபமறிந்து சொல்லிடுவா யிக்குறியை

## சந்தனமாரியம்மனை வரவழைத்தல்.

தென்னுட்டில் மேலான ஸ்ரீவில்லிபுத் தூரினிலே
பேராய்ப்பெருகும் பெரியகுளங் கண்மாய்க்குள்
தண்ணீரி லேமிதந்து தக்க அருளேரி
கண்மாய்ப்பட்டி யெல்கை கடைக்கொம்பு லேயொதுங்கி
தெய்வப் பொருளாகித் தேவியா யங்கிருந்த
சந்தன மாரித் தாயே பராபரையே

ஆய ருதவியினு லன்பாகக் கோவில்கட்டி
சித்திரை மாதமதில் சேருமம்மா வாசையன்று
அக்கினிப் பூக்குழிக ளருமையுட னுண்டாக்கி
மக்களைப் பூக்குழியில் மகிழ்வாய் நடக்கவைத்து
சுகங்கொடுத்துக் காப்பாற்றி சுந்தரமாய் வைத்திருந்த
பஞ்சவர்ணக் கிளியே பாப்பாத்தி யிப்போது
வாக்கிலிருந்து வரந்தரவும் வேணுமம்மா

## ஆவுடையம்மனை வரவழைத்தல்

தேவ ரிடுக்கந் தீர்த்து விடுவதற்கு
ஆவுடையாய்த் தான்பிறந்து அருளோ டிருக்கையிலே
சூராவழிக் காற்று தூக்கிப் பனந்தோப்பில்
மரத்தின்மேல் வைக்க வானவர்கள் தான்சூழ்ந்து

காவல் புரிந்திருக்கக் கண்டிடையர் தோத்தரிக்க
ஆயனொருவ னெழுந்து ஆவுடையைப் போற்றிசெய்து
தூக்கியே தோளில்வைத்துத் துலங்குமருதங்குடியில்
ஆலயத் துள்ளிருத்தி அனைவோரும் போற்றிசெய்த
மஞ்சனைக் காரி மல்லிகைப் பூக்காரி
கொஞ்சும் நகையணிந்த குழந்தையெனு மாவுடையே
வைத்த குறியின் வழக்கதனைச் சொல்லிடுவாய்

அழகமலையானை வரவழைத்தல்.

பாற்கடலைவிட்டுப் பண்பாக வேயெழுந்து
வசுதேவனுக்கு மகனாக வந்துதித்து
அழக மலையி லப்ப னெழுந்தருளி
பாங்குபதினெட்டாம் படிக்கருப்பைக் காவல்வைத்து
தீர்த்தக் கரைக்கு சீர் முத்து ராக்கைவைத்து
துவாரபால கன்றனையும் சுகமாக அங்கிருத்தி
கேத்திர பாலனையும் கிருபையுடன் காவல்வைத்து
பசுமேய்க்க வேணுமென்று பசுக்களையுந் தானோட்டி
மலைமேற் பசுமேய்த்து மகிழ்ச்சிமிக வுண்டாகி
சிங்குழலை வாயில்வைத்து சிறப்பாகத் தானூதி
மாடுகளைத் திரட்டி மலையைவிட்டுக் கீழிறங்கி
பாடிக் கறந்தாயே பாற்பசுக்க ளத்தனையும்
ஊராக்கிணறும் உறங்காப் புளிமரமும்
சீரான மேடைகளும் சிறந்ததெப்பப் பூஞ்சுனையும்
காவல் பதனமென்று கருப்பணனைக் காவல்வைத்து
குறிமுகத்தில் வந்து கூட அருகிருந்து
வைத்த குறியை மகிழ்வாகச் சொல்லிடுவாய்

பதினேட்டாம்படி கருப்பண சுவாமியை
வரவழைத்தல்.

படிவாசல் முன்பாகப் பக்துவமாய்க் காத்திருக்கும்
பெரிய கருப்பா பெருமா னிடமுரைத்து
மலையைவிட்டு வந்து மனமிரங்கி யிப்போது
வைத்தகுறிக்கு வழக்குகளைச் சொல்லிடுவாய்
வந்திட்டான் வந்திட்டான் மலையாளப் பொன்கருப்பு

இனிமேலு மஞ்சாதே என்பிறவி கத்தாதே
எல்லாங் குறிமுகத்தில் எடுத்து உரைக்குகிறேன்
இனமாக வுந்தனுக்கு எடுத்தெடுத்துச் சொல்லுகிறேன்
மனக்கவலே விட்டுவிடு மயங்காதே என்னுசான்
ஓசை விளங்கி உலகந்தனில் வழங்கும்
பாஷை பதினெட்டாம் படிக்கருப்பன் வந்துவிட்டேன்
உருமைக் கருப்பாயென் னுள்ளத்திலே மேவும்
அருமைப் பெரிய கருப்பையா வரந்தருவாய்

இருளாயி அம்மனை வரவழைத்தல்.

மட்டஞ் சிறுசாம் மதளேப்பிராயம் வணங்காமுடி நாடு
கொச்சிவள நாடு முத்துயிருளாயி குடியிருப்போ ஈடு
ஆதிகிழக்கு மறவர்பதிக்கு அதிமறவர் சீமையிது
சின்னமறவர் ஈனேயீன்ற இருளு சிவகெங்கைப் பூமிய
பெரியமறவர் ஈனேயீன்ற யிருளே பேர்போன நன்கு
மங்கள நாடு யிருளாயித் தாயே மறவர்பதிச் சீமைவிட்டு
மாலேகுலுங்க முத்துயிருளாயி மணிமாலே நின்றசைய
ஒருகையிற் பிள்ளேகளும் ஒருகையிற் மைந்தனென்றும்
கக்கத்தில் பிள்ளே மார்பிற் கனகரத்ன மாலேயொன்றும்
பதினுறு மக்களும் பாலுக்கு நின்றழுக
அழுதபிள்ளே தானமர்த்தும் அருங்கிளியே நல்லாடே
ஆற்றை கிராய்வளேத்து அக்கரையைக் கோட்டைசு
சுற்றிக் கிராய்வளேத்து சூரியொன்று தானெடுத்து
குட்டி கிடைக்கவில்லே இருளு குறம்பாடி நிற்கையிலே
ஒருத்திக் கொருமகளாய் ஒட்பதுமாதங் கெற்பமதில்
வயிற்றிருந்த கெற்பமதை வாங்கியே யப்போது
பிள்ளேக்கறிசமைத்து மக்களுக்குப்போராகப்போடையிலே
அதிலுமோர்பிள்ளேக்கு கரியோ அகப்படவில்லே யென்று
குலவையிடும் வேளேயிலே யிருளாயி குத்தினுள் சூலா
பட்டுநிலப்புரள இருளு பாடக்கால் ஜோதிமின்ன
ஆடைகொடியிலாம் என்னுச்சி ஆபரணம் பெட்டியிலே
சேலேகொடியிலாம் ஆச்சிக்கு செல்லநகை பெட்டியிலே
வாக்குக் கொடுத்தவளே வந்திறங்க வேணுமிப்போ
வைத்தகுறிக்கு வழக்குகளேச் சொல்லுமம்மா

### இருளப்பசுவாமியை வரவழைத்தல்.

மாசிக்களரியும் வருகும் இளம்பிறையில்
பாரிவேட்டைக்காலம் இருளன் பதினைந்துநாளிகையில்
ஈரசந்திவேளைசத்தசாகரமூர்த்தி இருட்கவிந்தவேளையி
கட்டினார் லங்கோடு யிருளுக்குக் கையிற்றிருவோடு [லே
கம்பியினாலிழைத்த செம்புக்கடுக்கான் காதில்
புலியும் புலித்தோலாம் புள்ளிமா னாசனமாம்
மார்புரளப் பூணூலும் மடிநிறைந்த வெள்ளோடும்
இரணகளப்பூமியிலே இருந்துதவஞ் செய்கையிலே
தெற்கே விழுந்தசடை இருளுக்கு சிவகாமி பூஜைசெய்ய
மேற்கே விழுந்தடை மேலுலகோர் பூசைசெய்ய
கிழக்கே விழுந்தசடை ஆதிக்கிழவனுமே பூசைசெய்ய
அஞ்செழுத்து மந்திரமும் அன்பத்தோ ரட்சரமும்
முக்கோணச் சக்கரமும் முன்னேதான் பூசையிட
பூசையிட்டுதானிருக்க இருளன் புதைகுளியாம்பூக்குடலை
ஒத்தமுகம் சத்தசாகரமூர்த்திக்கு ஒருகுடலைப்பூவுகளும்
மல்லிகை யிருவாட்சி மரிக்கொழுந்து செண்பகமும்
பிச்சிமலரெடுத்துஇருளனுக்குஉச்சிச்சடைதான்வகுந்து
சடையிலேபோட்டுத் தவசுசெய்யும் வேளையிலே
மாண்டயிடந்தனிலே மகாபூசை யோடிருந்து
பூசைமுடித்துபுகைக்குளியைவிட்டுபூக்குடலைதான் தூக்கி
அஞ்சுமுகக் கப்பரையும் அருமையுடன் றானெடுத்து
பாண்டியன்கேணி பள்ளத்தெருவில் பவனிவருகையிலே
பாண்டிமுனிவந்து கப்பரையைப் பங்கமதுசெய்கையிலே
அபயமபயமென்று அர்த்தசாமம்அலறுமந்தவேளையிலே
இடதுபுரம் பொன்சுடலை வலதுபுரம் மார்நாடு
வாதாடிவாதாடி எனைப்பெற்றகருப்புவாங்கினார்பூக்குடலை
வட்டோடு வாங்கிவந்த மாயிருளே வாக்கருள்வாய்
படைமுயிரங்கலையோ மூன்னாள் வைத்தாண்டமுத்திருளே

### முத்துவீராயி அம்மனை வரவழைத்தல்.

சந்திரகிரியிருந்து தான்வந்து பார்த்திபனூர்
சிந்தை மகிழ்வாகச் சிறப்பா யிருந்தவளே

வீரனுதன் றன்னை விரைவாக மாலையிட்டு
வாக்குக் கொடுத்தவளே மாதுமுத்து வீராயி
ஒன்பது கம்பளத்தை யுகந்துஅர சாண்டவள்நீ
மன்னன் பரியேறி மடிந்ததொரு சொற்கேட்டு
மனங்கலங்கித்தெய்வ மாயிருக்க வேநினைத்து
பூவாடையோடு புதுநெருப்பி லேபாய்ந்த
மஞ்சனை மார்பழகி மறைந்து வெளியேறி
உத்தப்ப நாயக்கனூர் உயர்ஜமீந் தாரவர்க்கு
வேண்டும்வரத்தை விரும்பிக்கொடுத்தவளே
வனத்துக் கிளியே வந்திரங்க வேணுமிப்போ
குறிமுகத்தில் வந்து குலவையிட்டு யிப்போது
வைத்தகுறியின் வழக்குகளை நீதீர்த்து
என்பிறவி தங்களுக்கு இப்போ தருள்கொடுத்து
உன்புதல்வன் றன்னை உகந்துகாப் பாற்றுமம்மா

தீர்த்தக்கரை ராக்காயி அம்மனை வரவழைத்தல்.

தேவகியாள் தன்வயிற்றில் திருவவதா ரங்கள்செய்த
மாயவன் கூடப்பிறந்த மாகாளி யாயெழும்பி
கஞ்சன் றனை மிதித்து ககனமதில் நின்றுகொண்டு
வாக்குக் கொடுத்துவிட்டு மகிழ்வாக வேயெழும்பி
அண்ண னிருக்கும் அழகமலை வந்திறங்கி
மாயாவதாரனை வாழ்த்தியங்கு நிற்கையிலே
எங்கோன் மனமகிழ்ந்து இராக்காயியைப்பார்த்து
மண்டூக மாமுனிக்கு வரவழைத்தேன் தீர்த்தமொன்று
அந்தத் தீர்த்தத்திற் கருங்கேடு நேராமல்
தீர்த்தக்கரையிற் றிரமாயிருக்கவென்று
வாக்குக் கொடுத்தபடி வந்திருந்த பொன்ராக்கு
மஞ்சனைக்காரி மாலினுட தங்கையரே
கொஞ்சும் நகையணிந்த கோவிந்தன் றங்கையரே
வைத்தகுறியின் வகைசொல்வ தற்காக
தீர்த்தக் கரையைவிட்டுத் தேவியெழுந்திரியே
பாலன் மயங்குவது பண்பாகக் கேட்கலையா
தேட்டுக் குருவி செல்வியிங்கே வாவாவா

### காளி அம்மனை வரவழைத்தல்.

காளிகபாலி காரணியே வல்லவியே
மகுடா சூரன் றனையும் வளர்காலிற் போட்டுதைத்தாய்
கயிலாச வாசன்முன்னே காளியுருத் தானெடுத்து
முன்னின்று ஆடி மூவுலகும் பேருபெற்று
தில்லைதனிலே திருநடனஞ் செய்தவளே
மதுரைசுந்த ரேசனை மாறியாடச் செய்தவளே
உருத்திரகளப் பூமியிலே ஓங்காரங் கொண்டவளே
மன்னவனிப்போது வைத்த குறிதனையும்
இன்னதென்று சொல்ல இயல்பாக வந்திடுவாய்

### மாரி அம்மனை வரவழைத்தல்.

மாதுகௌரி மகமாயி தான்பிறந்து
சாதுவாய்க் கஞ்சனையுந் தானுதைத்துக்கோவில்கொண்டு
பேதைப் பருவத்தில் பிரபல்ய மாகவேதான்
தென்னாட்டில் நின்று திருவிளையாடல்புரிந்து
பெதும்பைப் பருவத்தில் பெரியகுளம் வந்திருந்தாய்
வாலைப்பருவத்தில் மதுரை தனில் வந்திருந்தாய்
மங்கைப்பருவத்தில் வந்தாய் சமயபுரம்
மடந்தைப் பருவத்தில் மார்நாடு காத்திருந்தாய்
அரிவைப் பருவத்தில் ஆய்ப்பாடி வந்திருந்தாய்
தெரிவைப் பருவத்தில் திருச்சியிலே வந்திருந்தாய்
பேரிளம் பெண்பருவம் பேணியிந்த ஊர் முழுதும்
செங்கோல் செலுத்தித் திருநடனஞ் செய்துவந்தாய்
இப்போது யென்குறிக்கு இயல்பாக முன்புவந்து
வாக்குக் கொடுத்து மகிழ்வாய்க் குறிகளை சொல்வாய்

### சத்தகன்னிமார்களை வரவழைத்தல்

கயிலாசந் தன்னில் கருதியங்கு தானிருக்கும்
ஈசருக்கும் ஈஸ்வரிக்கும் இயல்பாகப் பூப்பணிகள்
செய்துவருஞ் சத்தகன்னி தேவியுந்தான் பூவெடுக்க
கண்டு மகரிஷியுங் கனகோபங் கொண்டெழுந்து
கன்னிமார் தங்களுக்குக் கனசாபந் தான்கொடுக்க
வனத்திலுங் கோவிலிலும் வாசமது செய்திருந்த

சத்தகன்னித் தாயே சமயமிதுவாகும்
கருணைவைத்து யென்னுவில் கணக்காகவேயிருந்து
வாக்குதவ வேணுமம்மா மாதுசத்த கன்னியரே
இப்போது வைத்தகுறி இயல்பாகச் சொல்லிடுவாய்

ஒன்பது கம்பளஞ் சக்கமாதேவியை வரவழைத்தல்.

கம்பளத்துக் காதியதாய் கனகமய மாய்விளங்கும்
சக்கமாதேவி தாயே பராபரையே
தொட்டியத்துப்பேரு துலங்கவைத்த யென்தாயே
உன்பேருந் தான்விளங்க உயர்குலமுந் தான்துலங்க
ஒன்பது கம்பளத்தில் உயர்வாக வந்தவளே
பாலன் மயங்காமல் பண்பாக யிப்போது
நாவுதவருமல் நல்வாக்குத் தந்தருள்வாய்
வாக்குத் தவருமல் வந்திருந்து யென்னுவில்
இருந்து குறியாவு மியல்பாகச் சொல்லிடுவாய்

சடைச்சியம்மனை வரவழைத்தல்.

சாரங்கபாணியுட தங்கை சடைச்சியம்மா
பாரெங்கும் போற்றும் பார்சடைச்சியம்மா நான்
உய்யும்வழியை உகந்தெனக்குக் காட்டிவைத்த
வையம்பட்டிச் சடைச்சி வாக்குதவ வேணுமம்மா
செல்வப் பிராயந் சிறுபிரா யந்தனிலே
கம்பளத்தில் வாக்குக் கருதியே பெற்றவளே
உன்னைப் பணிந்தவர்க்கு உயர்செல்வந் தந்தருளும்
கம்பைக் கதிகாரி காரணியாம் பொன்சடைச்சி
தீச்சட்டி தானெடுத்துத் தெருத்தெருவாய் வந்துநின்று
விளையாடுந் தாயே மெய்யான தேவியரே
என்பிறவி வைத்தகுறி இனிமையுடன் சொல்லிடுவாய்

பேச்சியம்மனை வரவழைத்தல்.

மஞ்சனைப் பேச்சி வனப்பேச்சி யிப்போது
சந்தனப் பேச்சி சடைப்பேச்சி வந்திடுவாய்
உருத்திரகளப் பூமியிலே உகந்திருக்கும் மாபேச்சி
பெரியமுத்துப் பேச்சி பிள்ளைகளை யிடுக்கி

கண்ணனூர் வந்து கமலத்தில் வீற்றிருந்து
பூசைமயா னத்தில் போட்டிருந்த பேச்சியம்மா
ஆசான்மயங்காமல் அறிவுசற்றுங் குன்றாமல்
என்பிறவி வைத்தகுறி ஏதுகுறை நேராமல்
இந்தச்சமயம் இயல்பாயென் னுவிருந்து
மனது பதறாமல் வகைவிபரஞ் சொல்லும்மா

சமையனை வரவழைத்தல்.

சுடலைதனை முன்வைத்து சேனைமுத்தைப் பின்வைத்து
மாசானத் தையனையும் வலதுபுர மாகவைத்து
அர்த்தசாம நேரம் அடைவாக வேயெழுந்து
உருத்திரகளப் பூமியினில் உண்மையுடன் வந்திறங்கி
பூசைமுடித்து பூக்குடலை தானெடுத்து
கள்ளுடன் சாராயங் கலந்துகுடித் தேப்பமிட்டு
கள்ளர்ஊர் காக்குஞ் சமையனே யிப்போது
வரவேணு மிக்குறிக்கு மனதுவைத்து எந்தனுக்கு
தரவேணும் நல்வாக்கு சமையனே வந்தருள்வாய்

சப்பாணிச் சாமியை வரவழைத்தல்.

ஒத்தக்கால் நொண்டி ஒருகால் நடையுடைய
வாதக்கால் நொண்டி வல்லவா சப்பாணி
துட்டுத்தடிகள் தோளிலே தான்துலங்க
கையிலே வீச்சருவாள் கணக்காகவேபிடித்து
சுருட்டுகளை வாயில்வைத்து சூழ்பந்தந் தான்போட்டு
ஒத்தக்கால் மண்டியிட்டு ஒத்தக்கால் தானிழுத்து
பவனி வருகையிலே பார்த்ததாராம் பொன்கருப்பு
இருவருங்கூடி இயல்கிருத மானதியில்
மாசானப் பூமியிலே வந்திருந்து பூசைசெய்து
சப்பாணி தானுஞ் சாரிவருகையிலே
நீலமேகங்கண்டு நேர்மையுட னங்கிருத்தி
என்னிடத்தில் நீயு மிருக்கணு மென்றுசொல்ல
சரியென்று சொல்லித் தானிருந்து பின்பெழுந்து
பாண்டியன் கேணி பள்ளத்தெருவினிலே
சாரியாய்வந்து சமையனையுங் கூடவைத்து

கீழத்தெருவில் கிழக்குநல்ல மூலையிலே
கப்பரையோடு கனபூசை தான்முடித்து
அருதக்கலையணைத்து ஆண்டுவந்த பொன்கருப்பே
இந்தச்சமய மிரங்கிவர வேணுமையா

முனியாண்டியை வரவழைத்தல்.

முசுண்ட கிரியிருந்து முழுங்கு முனியாண்டி
பாண்டவர்களை வனத்தில் பட்சமுடனே காத்து
ஆண்டியென்ற பேரை அருமையுடன் கொண்டவரே
பாண்டி முனியாம் பழமதுரை நன்னாட்டில்
வேண்டும் வரங்கொடுத்து விரும்பி யிருந்தவனே
மொட்டைக் கோபுரமேவு முனியாண்டி ஐயா நீ
ஆர்த்தபெரும் பூதமெல்லா மஞ்சிப்பதுங்கவைக்கும்
மூர்த்தண்யமுத்து முனியாண்டி யிப்போது
கோபுரத்தின் மேலிருந்து குதித்து வெளியேறி
பாரச்சடையே பவனிவாலாகாதா
நினைத்தகுறியின் நேர்மைகளைச் சொல்லுமையா

சுடலைமுத்தை வரவழைத்தல்

மாசிநல்ல மாதம் வருகுமமா வாசையினில்
சிவராத்திரியுஞ் சேர்ந்த இரவுதனில்
ஈரசந்திவேளை யிலைதுலுங்கா நேரமதில்
பூக்குடலை தூக்கி பொன்சுடலை யப்போது
பாரிவேட்டை யாட பக்குவமாய்த் தானெழுந்து
உருத்திரகளப் பூமிக்கு உரிமையுடன் றானேகி
புதைகுளியைச் சுற்றி பூக்குடலை தானெடுத்து
சடையை யவிழ்த்துவிட்டுத் தவசு மிகப்புரிந்து
பூசை முடித்தவுடன் புஷ்ப மலர்ந்திருக்க
திருவருளு முண்டாகி சிறப்பா யெழுந்திருந்து
ஆலய வாசலிலே அமர்ந்த சுடலைமுத்தே
வந்தென் குறிக்கு வழக்குகளைச் சொல்லுமையா

சோணைமுத்தை வரவழைத்தல்.

தேட்டுக்குருவி சிறப்பான சோணைமுத்தே
நவராத்திரியில் நற்பூசை தான்முடிக்க

மார்பினிற் பூணூலும் வலதுபுரங் கேடயமும்
கழுத்திலே பூமாலை கமகமென வேமணக்க
கையிலே வெட்டரிவாள் கனகமய மாய்விளங்க
செபப்பண்ணித தானெழுந்து தெருத்தெருவாகவேதான்
சாரிவருகையிலே சமயனங்கு சோணைமுத்தை
வழிமரித்துக் கொள்ள மதுரைவீரன் பார்த்து
சமையனைத் தான்விரட்டித் தக்கநல்ல சோணைமுத்தை
வீதிவல மாகவைத்து மெய்யாய் வரங்கொடுத்து
ஆலயத்தில் வந்திருந்த அப்பனுஞ் சோணைமுத்து
நல்வாக்குத தந்து நாவிலிருந்தருள்வாய்

மதுரைவீரனை வரவழைத்தல்

தொட்டியத்துச் சின்னு துரைமதுரை வீராவா
மட்டுக்கடங்கா வரிப்புலியே வீரையனே
பொம்மியம்மா ளாலே பொம்மணனைத் தான்செயித்து
மதுரையிலே தானும் வந்துகள் ளரையடக்கி
திருமலை நாயக்கரிடம் சேவகமா யிருந்து
வெள்ளை யம்மாளை விரும்பிச்சிறையெடுத்தாய்
சிறையெடுத்த செய்தி திருமலைக்குத் தான்தெரிந்து
மதுரைவீரன் றன்னை மகிழ்வா யருகழைத்து
வாக்கு மூலத்தை வாங்கியே வாளதனால்
மாருகால் மாருகையை வாங்கும்படியாக
உத்திரவுசெய்ய உடனேதான் மல்லர்களும்
மதுரைவீரன்றன்னை மாருகால் மாருகையை
வாங்கிவிடவே மதுரைவீர னப்போது
தெய்வந் துணையெனவே சிறப்பாய் யுயிர் நீங்க
வெள்ளையம்மாளும் விருதுபெற்ற பொம்மியரும்
தெய்வீக மானார்கள் சேர்ந்ததொரு மூவரையும்
மீனாட்சி கோவில்முன்பு மிக்கவடபுரத்தில்
திருமதிலோரம் தெய்வச் சிலைகள் செய்து
மூன்றுசிலையும் முன்னழகோ டுண்டுபண்ணி
முதற்பூசை வீரனுக்கு முன்பு கொடுத்தார்கள்
இப்படியாய் வந்த இயல்வீர சுவாமியுனை
வணங்கினே னிப்போது வாக்கருள வேணுமையா

### மாசானத்தய்யனை வரவழைத்தல்.

உருத்திரகளப் பூமியிலே ஒழுங்கா யரசாண்ட
மாசானத் தையா மனமிறங்க வேணுமிப்போ
மயானமுந் தன்னுடு வாழ்வோ இடுகாடு
இரணகளப் பூமியிலே இயல்பாக நீயிருந்து
புதைகுளிகள் பார்த்து பூசைமுடித்திடுவாய்
செத்த பிணத்திற்குச் செபதபங்கள் செய்திடு ாய்
மாண்ட பிணத்திற்கு மகாபூசை செய்திடுவாய்
வேகும் பிணத்தில் வெகுபூசை கொண்டிடுவாய்
வந்த பிசாசுக்கு வயண முரைத்திடுவாய்
எந்தப் பிசாசுகளும் ஏவல்செய்யச் செய்திடுவாய்
ஏர்க்குஞ் சபையோ ரிகழாம லித்தருணம
வாக்குதவுமாசான் வள்ளலே வந்திடுவாய்

### கோட்டைமலையானை வரவழைத்தல்

நாடுமலைக்கும் நடுமலைக்குள் ளேயிருக்குப்
கோட்டை மலைமேலே குஞ்சரம்போ லே துலங்கி
வனமே குடிகொண்ட மட்டடங்கா ஆ முத்தே
கானகமே கைக்கொண்டு கருத்தோ டிருப்பவனை
ஆரணியந் தன்னி லனேக மிருகமதை
கைவசம தாக்கி காவல் புரியவைத்தாய்
குழந்தை மயங்காமல் கொண்டணைத்து வைத்திருந்தாய்
ஆசான் மயங்காம லடைவாக யிங்குவந்து
குறியை யுரைத்திடுவாய் கோட்டைமலைத் தெய்வமே நீ

### மார்நாட்டுக் கருப்பை வரவழைத்தல்.

வடதேசந் தான்பிறந்து மகிழ்வாயி ருக்கையிலே
தீவெட்டிக் கொள்ளைத் திருடர்கள் குழந்தை தூக்கி
நகைகள் தனைக்கழட்டி நாடெங்கும் போராக
மார்நாட்டு யெல்லையிலே மகிழ்வாகப போட்டுவிட்டு
களவுக்குப் போனுர்கள் கட்டழகி பள்ளியுந்தான்
காலையெழுந்து கடுகவழி போகையிலே
குழந்தையைக்கண்டு குதூகலமாய்த் தான் தூக்கி
மனைதனில் வந்து மஞ்சள் நீர் தானுட்டி

சீராட்டிப் பாராட்டி சிறப்பாகத் தாராட்டி
வளர்த்து யிருக்கையிலே வாள்வீரரோடுசென்று
கச்சைகட்டி வாளெடுத்து கட்டாரி கைப்பிடித்து
கொள்ளை யடிக்கையிலே கொடுஞ்சாம்பன் கையாலே
தெய்வீகமாகித் திடத்தோ டிருந்தவனே
மார்நாட்டுக் குள்ளே மகிழ்வா யிருந்தவனே
பள்ளி வளர்த்தெடுத்த பட்சமுள்ள மார்நாடு
கருப்பன் கருப்பனென்ற சபைக்கதிகாரி
இந்தச்சமயம் வந்து இயல்பாய்நல் வாக்கருள்வாய்

வன்னியனை வரவழைத்தல்.

மறவருட நாடு மகாநாடு பொன்னாடு
தேவர்கள் தம்நாடு சிவகங்கை மாநாடு
தெய்வேந்திர குலத்தில் சிறப்பாக வந்துதித்த
வீரமுத்து பெற்றெடுத்த மெஞ்ஞான வன்னியனும்
பூவுலகிலே ஜெனித்து பொன்னாட் டரசுசெய்து
துட்டர் கருவறுத்து சூரர்களை வேரறுத்தும்
வாழ்ந்து வருங்காலம் வாழ்வீரர் கையாலே
தெய்வீகமாகி தெய்வநாட் டெல்லைவிட்டு
தென்னாட் டரசுசெய்து தெய்வகுல மானவனே
தேவரிடுக்கந் தீர்த்துக் கொடுத்தவனே
மறத்திமகனே வன்னியா யிப்போது
வைத்தகுறியின் மர்மத்தைச் சொல்லுமையா

பேமலை ராக்காயியை வரவழைத்தல்,

ஸ்ரீவில்லிபுத் தூராண்டாள் தேவியின் பூசைக்கு
சித்தர் மகிழ்வாகச் சிறந்த புஷ்பங்களுடன்
செண்பகப்பூத் தோப்புஞ் சீராகவுண் டுபண்ணி
மானிடர்க ளெப்பொழுதும் வந்துமலர் கொய்யாமல்
பேய்மலை ராக்கைப் பேணி யிருக்கவைத்து
சிங்கங் கரடிபுலி சிறந்திருக்க நாலுபக்கங்
காவல் பதனமென்று காத்திருக்கச் செய்துவைத்தார்
செண்பகத் தோப்பைச் சீராகக் காத்திருக்கும்
பேய்மலை ராக்கம்மா பிள்ளைமேற் சிந்தைவைத்து
நாவி லிருந்து நல்லகுறி சொல்லிடுவாய்

கோவிந்தா அரிகோவிந்தா.

ஆண்டா னுதவியினு லடியே னருகிருக்க
ஏண்டா மயங்குகிருய் இடையன்மகன் கத்தாதே
தேவரோ மானிடரோ திண்ணியநாற் காலினமோ
தாவிவரும் புல்லோநற் ருவரமோ வேறுளதோ
ஊர்ந்து திரிவனவோ வுந்தி நீர் வாழ்வனவோ
சோர்ந்த வுடையோ நகையோ சொர்ணப் பணிதிகளோ
சோரங்களேதுமுண்டோ தோன்றல்பிற வாக்குறையோ
காரங்கொள் மாற்ருர் கலகமோ யானறியேன்
மன்னனுக்கு நேர்ந்த வருத்தமோ இன்னிலத்தில்
முன்னவர்கள் திட்டு முறைப்பாடோ யென்னுசான்
ஊரார் குளப்பமுண்டோ உற்றபொருள் சேதமுண்டோ
பாராளும் வேந்தர் பகைவலியோ வாக்கருள்வாய்
தெய்வக் குறைகளுண்டோ செய்வினைக ளேதுளதோ
மெய்யின்ன தென்று விளம்புகிறே னஞ்சாதே

சகல விஷயமுஞ் சொல்லுதல்.

மனையாளின் நன்மைகளை மகிழ்வாகக் கேட்டதுவோ
பாரியா ளுந்தான் பயந்ததொரு சீக்குகளோ
குழந்தையில்லை யென்ற குறியோ அறியேனுன்
மகன்ருன் பயந்த மயக்கமோ அல்லவென்ருல்
செல்வனுக்கு வந்த சீக்கோ இருளதனுல்
காரிழையாளுக்குக் கண்ட கருப்பிதுவோ
பேர்கால மாவதற்குப் பேசுந்திடந்தானே
பாலகனைப் பள்ளியிலே படிப்பிக்க வந்ததுவோ
மன்னனுக்குச் சீக்கு வருத்தமதைத் தீர்ப்பதற்கோ
கணவனதிஷ்டங் காணுதற்கு வந்ததுவோ
செல்வன் கலியாணச் செய்திகளைக் கேட்டிடவோ
பெண்மணியின் கல்யாணப் பேச்சை நடத்திடவோ
தூக்கத்திற் கண்ட சொற்பனத்தைக் கேட்பதுவோ
விவாகம் நடத்த விருப்பிவந்து கேட்டதுவோ
கையைவிட்டுப் போன களவு தெரிந்திடவோ
எதிரிவைத்த சூனியத்தி னியல்பை யறிந்திடவோ

கன்னியின்ற ளுசையிலே கரும்பே யடித்ததுவோ
வீட்டுக்குப் பெண்தேட வேண்டி நினைத்ததுவோ
பொன்பொருள் மேலிச்சை பொருந்தியிங்கு வந்ததுவோ
ஆபரணஞ்செய்ய ஆசையுடன் கேட்பதுவோ
காணுக் கடியாய்க் கடித்தவிஷந் தீருதற்கோ
விட்டுக் கொடுத்தபொருள் வேண்டிவரப் பார்த்ததுவோ
கோர்ட்டுப் பிராது குணங்கேட்க வந்ததுவோ
குலதெய்வந் தன்னைக் கும்பிடக் கேட்டதுவோ
சாமி பிரார்த்தனைகள் தாடனத்த யெண்ணினதோ
தீர்த்தநல்ல யாத்திரைகள் செய்துவரப் பார்த்ததுவோ
வியாபாரந் தன்னை விரிவாய் நடத்திடவோ
ஊருக்குப் போகவர உண்மைதனைக் கேட்டதுவோ
வந்த வியாதிதீர வகைகேட்க வந்ததுவோ
மனைவீடு வாங்கி மகிழ்ந்திருக்கப் பார்த்ததுவோ
வீடுகட்டி யிப்போதே வீடுகுடிபுகவோ
இல்லிடத்தை விட்டுவே ரிருப்பிடத்திற் போயிருக்க
வீட்டை யொருவருக்கு விட்டுவிட நினைவோ
தீப்பிடித்து வெந்த சேதி தெரிந்திடவோ
பயிர்செய்வதற்குப் பண்பாய் நிலம் வாங்கி
தோட்டங்கள் வைத்து சுகமடைய எண்ணினதோ
வெள்ளாண்மை தன்னில் விழுந்தபெரு நோவுகளோ
நஞ்சைபுஞ்சை தன்னில் நல்விளைவு கேட்டிடவோ
வருண பகவானல் மழைபெய்யக் கேட்டிடவோ
நிலத்திற் கிணருவெட்டி நேர்மையுடன் பார்த்திடவோ
நஞ்சை புஞ்சை தன்னை நலமாக விட்டிடவோ
மாடாடு வாங்கி மகிழ்ச்சிபெறக் கேட்பதுவோ
மாட்டுக்குச் சீக்குவந்த வகைவிபரங் கேட்டிடவோ
மாடாடுதன்னை வகையாய்க் கொடுத்திடவோ
பட்டியில் நடந்த படுகளவைக் கண்டிடவோ
ஆடெடுத்துப் போன அருமை தெரிந்திடவோ
மாட்டுக் களவுகளின் வகைவிபரங் கண்டிடவோ
துலைசென்ற மன்னன் துருசில்வந்து சேர்ந்திடவோ
தெய்வக் குறைகளுண்டோ செய்தி யறிவமென்றே

நச்சுக் கெவுளிசொன்ன நலங்கள் தெரிந்திடவோ
என்று நினைத்து இதுவிபரங் கேட்பமென்றும்
வைத்தகுறியின் மகிமைசொன்னே னென்னுசான்

இதுசமயம் அறிவுமயங்கிக் குறிசொல்லுதல்.

வைத்தகுறிக்கு வழக்குண்டோ கேளாசான்
சித்தமறியச் செப்புவேன் தீர்மானம்
காடுசெடியுங் கமழுகின்ற சோலைகளும்
மாடுகளை யோட்டி மலைமீது சென்றேனுன்
மலையிற் பசுமேய்த்து வருகும் வழிதனிலே
மலைமீ தொருகுரங்கு வழிபார்த்துத் தானிருக்க
அடவிதனில் தண்ணீ ருந்துகின்ற வேளையிலே
மடுவிலே வாயைவைத்து மால்கடிக்கக் கண்டேனுன்
சொன்ன குறியுனக்குத் தோணலையா யின்னேரம்
மன்னனரைந்த வார்த்தைதெரியலையா
மலையில்நல்ல பூசை வகையாக வேநடத்தி
தலைமையாய்த் தானிருந்து தழுகை நடத்தையிலே
அந்தரத்தில் சத்தம் அதிர்ச்சியுடன் கேட்க
விந்தையதான வெளிச்சமொன்று கண்டேனுன்
பத்துமா தம்சுமந்த பச்சைக் குழந்தைதனை
பெத்து வளர்த்துப் பிரபலமாய் வைத்திருந்தேன்
தாயதனைத்தேடி தம்குழந்தை வந்ததுபோல்
மாயமுடன் சொர்ப்பனத்தில் வந்துவிடக் கண்டேனுன்
பூசை மயானத்தில் போட்டு முடிக்கையிலே
ஓசையுடன் பெண்கொடியா ளுடன்வரவுங் கண்டேனுன்
தெரியவே சொன்ன தீர்மானந் தோணலையா
அரிய உரைத்த ததுவிபரஞ் சொல்லுகிறேன்
இல்லடம்பூமி யிருப்பாகி மத்தலத்தில்
நல்லதினத்தில் நாம்புகுந்து பார்ப்போமென்று
வட்டாரஞ் சூழ்ந்த மனையில் நுழைந்தேனுன்
திட்டமுட னங்கோர் திரங்கண்டே னோர்வசனம்
அரவினுட வாயி லகப்பட்ட பாவனைபோல்
விரவிலொரு மாது மெய்சோரப் பார்த்தேனுன்

மணவரையின் பந்தலிலே மாப்பிளையும் பெண்ணுமொரு
குணமாய் மணம்புரிந்து கூடிவாழ் நாளையிலே
கிணறிடிந்த பாவனைபோல் கிடுகிடெனும் போதினிலே
மணமாலைசெய்த மாப்பிள்ளைக்கு நேர்ந்ததென்றும்
கோறினதுந் தெய்வம் குறித்ததுவு மானிடமே
தேறி வருவமென்று திடங்கேட்க வந்தாய் நீ
சொல்லும் வழக்குத் தோணலையோ யென்ஞசான்
அல்லவென்றால் தள்ளிவிடு ஆசானுஞ் சொல்லுகிறேன்
மற்ற திருக்கட்டும் மயங்காதே யென்ஞசான்
உற்ற தின்னதென்று உரைக்கிறேன் கத்தாதே
சீவன் றிடமுறுதி சேர்ந்தமனை சேத்திரமொடு
பூமியிலே முளைத்த பொருளதனைச் சொன்னேனுன்
தாவரமே யாகுமென்று தான்சொல்வார் நம்பாதே
பூவில் வழங்கும் பொருளாகு மென்ஞசான்
நாலுகாற் சீவன் நடமாடுஞ் சீவனென்று
ஞாலமறிய நானுரைத்துங் காணவில்லை
ஆடவனே யாகுமென்று ஆசா னுரைத்த தில்லை
நாடி யொருபொழுதும் நப்பா திருந்துவிட்டாய்
பெண்ணுக்கு வாட்டமென்று பேசினதுந் தோணலையா
மண்ணுக்கு ளாடவரின் மர்மந் தெரியலையா

இச்சமயம் ஆக்கிரமத்துடன் சாமிவந்திறங்கி
குறிசொல்லுதல். [கோர்

இல்லையப்பா சொல்லவொண்ணு தென்னை மருட்டியிங்
பில்லிப்பே யூடே பிரட்டுதப்பா அப்பேயை
ஆட்டிவைத்துக்கோட்டிகொள்வே னப்புறமாகட்டுமிந்த
திட்டுக்குறியின் திரப்சொல்வே னென்ஞசான்
நின்றென் றிருமுகத்தில் நேர்ந்தகுறி வைத்தவ நீ
அன்றே நெருங்கி அருகினில்வா யென்ஞசான்
பொன்ஞன சிந்தையினிற் பூரித்து வைத்தகுறி
சொன்ஞ லெனக்குவளை சூட்டுவையா யென்ஞசான்
நல்லவடை யாளமொன்று நல்குவையா நானுமதைச்
சொல்லவா சொல்லவா சொல்லென்றாற் சொல்லுகிறேன்

கன்னியடா கன்னியடா கைநிறைந்த மாணிக்கம்
அன்னியரென் றெண்ணி அச்சம் நினையாதே
சொந்தமடா என்னுசான் சுகமில்லை யென்றுவந்தாய்
அந்தவழக்கு அரியஉரைக்குகிறேன்
தேகத்திற் பீடையன்னஞ் செல்லா தருவருப்பு
மாகஸ்தியான வயற்றுவலி யென்னுசான்
அச்சந் திகிலும் அதிரிடியுஞ்சொற்பனமும்
மச்சவிழி நித்திரையில் வாய்ப்புலப்ப மின்னமுங்கேள்
முந்தாநாள் நல்லிரவில் முதற்சாம வேளையிலே
தொந்தரவ தானவிவள் சொற்பனந்தில் வந்துதப்பா
சூலமிட்ட காளையொன்று துள்ளிவெடி வால்முருக்கி
ஞாலம்நடுங்க நமன்போலே மேல்விழுந்து
மோதியதன் கொம்பால் முடுகிமிகப் பாயவிந்த
மாது திடுக்கிட்டு வாய்குலறிப் பேதலித்து
உடனே மறந்துவிட்டா ளுண்மைநீர் கேட்டாக்கால்
மடவார்க்குத் தோன்று மயக்கமிது யென்னுசான்
ஆசான்நான் சொல்வதுவுஞ் அருத்தமிகத் தோணலையா
வாசலினிலந்த மாது பயந்ததையும்
நாட்டுப் பிணியோ நவக்கிரக தோஷமிதோ
கோட்டிப்பேய் செய்யுங் கோட்டாலை யென்றேதான்
கேட்டறிந்து கொள்வாய் கிலேச மதிகரித்து
வாட்டமுற்று வந்த வகைசொல்வே னஞ்சாதே

குறி கேட்பவர்களைப் பார்த்து ஆக்ரமித்துச் சொல்லுதல்

அட்டாள தேச மடங்கச் சிறைபிடித்துத்
தொட்டாற்பொன்னஞ்சு தொகையேற்றுமின்னமுங்கேள்
யீற்றுக்காணிக்கைக் கிரண்டுபணஞ் சூதகநீ
ஊற்றுக்காணிக்கைக் கொருபணமாய் வாங்கியிப்போ
கப்பமிட வெற்றிக் கருப்பன் கருப்பனென்றே
செப்பமுட னுணை செலுத்திவந்தே னிப்போது
பிறங்குமெனது பெயர்சொன்னு லுங்காகம்
கறந்தபா லுண்ணு து கண்டறிவா யென்னுசான்
போன வருடத்திற் புதுமைத் தினத்திலிவள்

தானு முருமத்திற் றனியாகத் தானிவளும்
கொஞ்சு நகையணிந்து கோடிப் புடவைகட்டி
மஞ்சள் குளித்து மலர்மிகவுந் தான்சூடி
செங்கை வளைமின்னச் சிலம்பு புலம்பவிரு
கொங்கை யசையக் குடமெடுத்து வந்துகங்கை
கரையோர மாயென் கடியநிலைதனக்கு
வரலாமா சொல்லிந்த மங்கையரை யப்போது
அன்றே யோர்போடாய் அறையவெழுந் தேன்மதுரை
குன்றை நிகருமொட்டைக் கோபுரத்தான் மன்ருடி
இருகையுந் தான்பிடித்து யென்பிள்ளை யென்றுசொல்லி
ஒருவாறு கெஞ்சி யுரைத்துமெனை யப்போது
வேண்டினதி னுலுமுயர் வேதனைசெய் யாதுவிட்டுத்
தாண்டியிந்த மாதைத் தொடர்ந்தேனு னென்னுசான்
மங்கைக்கு வந்த வருத்தமறி யாமலுநீ
பங்கப்பா டுற்று பலவிதமின் னுள்வரையில்
பண்டிதனைத் தேடிப் பணச்செலவி னுல்மருந்து
கொண்ட திலுமென்ன குணமாச்சோ யென்னுசான்
கொற்ற கருப்பனுட கோட்டாலை யல்லாது
மற்ருென்று மில்லை மயங்காதே யென்னுசான்
காவெனக்கு நல்கக் கருங்கக்சை கையறிவாள்
கூவும் பறவைபத்துக் கோழிமுட்டை தன்னுடனே
கள்ளுடன் சாராயங் கருவாடு மாமிசமும்
உள்ளபணம் பத்தோ டொன்றேகாலுந் தான்கொடுத்து
பூசை மயானத்திற் பொழுதஸ்த மானபின்பு
ஆசரணையாக அனுஷ்டித்து யெந்தனுக்கு
நல்லனவாய் நீயும் நடந்து கொண்டால் நானுமிப்போ
மெல்லியர்க்கு நல்லசுகம் மிகவே கொடுக்குகிறேன்

மனையாள் நன்மை தீமைகளைச் சொல்லுதல்

நான்கொண்டு வந்த நல்ல மனையாளிவள்தன்
குணங்களைச் சொல்லக் கூடுமோ யிப்போது
உனக்குக் கிடைக்கின்ற உத்தமியாம் பெண்ணெனக்கு
கற்பிலருந்ததியாம் கன்னியெனும் பெண்கொடியாள்
வந்த பிறகு வாழ்வுகளுங் கீர்த்திகளும்

உண்டாச்சு இப்போ உயர்வான வீடுகளும்
கட்டி முடியுங் கருத்திலே வைத்திடுநீ
இஷ்டம்போல் நஞ்சை இயல்பாக வேகிடைக்கும்
கன்னியி னாலே கனபொருளுங் கூடிவரும்
வேண்டிய மக்கள்தனை விரைவிலே பெற்றெடுப்பாள்
மக்கள் கலியாணம் வகையாகப் பார்த்தபின்பு
தெய்வக் குறையால் திடதைரியங் குறைந்து
கால்கை யசந்து கடும்பத் தியமிருந்தாய்
குணமாகும் பின்பு குபேரன்போல் வாழ்ந்திருப்பாய்
இந்தா பிடிசாம்பல் இயல்பாக வாழ்ந்திடுவாய்

கணவனுக்குச் சீக்குத்தீரச் சொல்லுதல்

மன்னனுக்கு நேர்ந்த வருத்தமிகச் சொல்லுகிறேன்
கால்கை யசதியுங் கடுமைமிகு சுரமும்
நாவறட்சி யோடிருக்க நான்கண்டே னிப்போது
எதினால் வந்ததென்று என்னைக் குறிகேட்டாய்
காதலனும் ராவில் கடுக வருகையிலே
கருப்பையா சாரி கனசாரி போகையிலே
அர்த்தசாம நேரம் அடைவாகக் கண்டுமவன்
கரும்பூனை போலே காலிடுக்குள்ளே நுழைந்து
பயமுறுத்தி வைத்தான் பாலனுக்குத் தோணுது
ஆகையா லிச்சீக்கு அரசனுக்கு வந்ததிப்போ
கருப்பனுக்கு ஐந்துபணங் காணிக்கை தான்முடிந்து
களரி நடக்கையிலே காணிக்கை தந்துவிடு
சவுக்கிய மாகிவிடுந் தப்பாது யென்வாக்கு

கணவனுக்கு சீவனஞ் சொல்லுதல்

அரசனென்ற மன்னனுக்கு அதிஷ்டங்களெப்போது
சாமியை கேட்பமென்று தான்வந்தா யோர்வசனம்
போன வருடம் புகழானி மாதமுதல்
வியாபார மில்லை விற்பனைகள் தானுமில்லை
காசு வரும்படிகள் கண்டிப்பாய் தானுமில்லை
மாடு படுத்ததுபோல் வரும்படியே தேனுமில்லை
எதுநா லென்று என்னைக் குறிகேட்டாய்

கிரகம் படுத்துதற்குக் கிலேசப்பட் டாவதென்ன
இந்தமா தங்கழிந்தால் இயல்பான நற்கிரகம்
மன்னனுக் கப்போது வருகிறது பின்னாலே
யோகம் வருகிறது உண்மை யுடனேதான்
எடுத்த செட்டுப் பலிக்கும் ஏராள மாகவேதான்
வேண்டிய லாபங்கிடைக்கும் விசன மினிவேண்டாம்
இன்னுமொரு செய்தி இருக்கிறது நீகேளாய்
வீட்டுத் தெய்வத்தை விரும்பிப் பணிந்துவந்தால்
தொட்ட வியாபாரந் துலங்கிவரும் நீபாராய்

வியாபாரஞ் செய்யச் சொல்லுதல்.

வியாபாரஞ் செய்ய வேணுமென் றேநினைத்து
ஆசா னிடத்தி லதுவிபரங் கேட்பமென்று
மனதில் நினைத்து வைத்த குறியிதுதான்
ஜவுளிக் கடைதனையும் தான்பார்த்தே னிப்போது
வைத்த வியாபாரம் வகையாகச் செய்திடலாம்
ஏராளமாய் லாப மிப்போ கிடைக்குமடா
ஆகையால் நீயு மன்பாய் ஜவுளிகளை
வாங்கி வியாபாரம் வகையாய் நடத்திவந்தால்
என் குடும்பத்திற்கு மெனக்குமே போதுமட்டும்
செய்து வைக்கிறேன் நீயுஞ் செய்குவா யிப்போது
பலசரக்கு வியாபாரம் பண்ணலா மென்றேதான்
கடையைப்போய்ப் பார்த்தேன் கடுகளவு தோணவில்லை
தேங்காய் பழங்கள் திறளாக விற்பமென்றும்
சாப்புச் சாமான் முதலாய் சகலமும் நான்பார்த்தேன்
நவதானி யக்கடையை நான்வைப்போ மென்றேதான்
நெல்லுக்கடைபார்த்தேன் நிறைமண்டியைப்பார்த்தேன்
இரும்புக்கடையை யேறிட்டுப் பார்த்தேனுன்
மனதுக்குத் தோணவில்லை வந்துவிட்டே னென்னுசான்
காய்க்கடையி லாபங் காணலா மென்றேதான்
எண்ணி யிருக்கின்றேன் யென்னுசான் கத்தாதே
நல்லதொரு நாளில் நானிருந்து உந்தனுக்குக்
கடைவைத்து தாரேன் கம்பையின் தீர்மானம்

## சீட்டுப்பிடித்து நடத்தச்சொல்லுதல்.

சேர்க்கையதாய் ஆயிரம்பேர்சேர்த்து நடத்துகிற
சீட்டுப்பிடித்து செலுத்த வேணுமென்றேதான்
ஆசானிடத்தி லதுவிபரங் கேட்பமென்று
கம்பையிலே பாக்குவைத்துக் காத்திருந்தாயென்னாசான்
திறமை யிருந்தால் தீர்மானஞ் சொல்லுகிறேன்
கூட்டாகச் சேர்ந்து கொட்டுச் சீட்டுப் பிடித்து
நடத்தலா மென்று நம்மைவந்துகேட்டாய்நீ
கூட்டுநல்ல வாணியத்தில் கோளுவரு மென்னாசான்
ஆகையால் நீயு மடியேன் பெலத்தாலே
சுமக்கும் வரைசீட்டு சுகமாக வேபிடித்து
நடத்திவா சீட்டை நான்கூட வேயிருந்து
அனந்த விதலாபம் அப்பா தருகுகிறேன்
மலையாமல் நீநடத்து மகனே மயங்காதே
யெடுத்த வியாபாரத்தி லீனம் வராதபடி
கார்த்துத் தருகிறேன் கம்பையினிற் றீர்மானம்

## குழந்தையைப் படிக்கவைக்கச் சொல்லுதல்.

கம்பையிலே சாம்பல் கவலைவிட்டுத் தான்வாங்கு
பாலகனாகிய பச்சைக் குழந்தைதனை
அரிஓம்நமா வென்ற அச்சரத்தைக் கற்பிவிக்க
மனதிலே யெண்ணி வைத்தாய் குறிதானும்
மைந்தனுக் கிப்போது வயதாறுந் தானாச்சு
படிக்கும் பிராயம் பாலனுக்கு வந்ததினால்
செல்வக் குழந்தையைச் சீராட்டிப் பாராட்டி
பள்ளிக்கு வைத்துப் படிப்புகளை யோதிவிடு
இந்தக் குழந்தை இங்கிலீஷ் தமிழ்படிக்கும்
மற்றபாஷைப்படிப்பு மார்க்கமில்லை யென்னாசான்
சந்தேகங் கொள்ளாமல் தான்படிக்க வைத்துவிடு
இவனுக் கதிஷ்டம் ஏராள மாய்வருகும்
கோர்ட்டுத்தி யோகங் குறியாகப் பார்த்திடுவான்
மாடிமேல் மாடி கட்டி வாழ்ந்திடுவான் பின்னாலே



O-,8,K
N53
114149

### குழந்தை பயந்த விஷயஞ் சொல்லுதல்.

என்பிறவிகூட யென்குழந்தை யுந்தானும்
வழிப்பயணம் போகையிலே மாதுநல்ல பைங்கொடியாள்
பணியாரஞ் சுட்டுப் பாதைதனில் விற்ருள்காண்
வித்தபணி யாரமதை வேணுமென யென்குழந்தை
வாங்கிக் கொடுத்தாள் மடியில் குழந்தைவைத்து
பணியாரங் கொண்டு பாதைவழி போம்பொழுது
வங்கொலேயாய் மாண்ட மனுவஞெரு வன்துயர்ந்து
பணியாரத் தைப்பிடுங்கப் பாலகனு மேபயந்து
பெற்ரு ளிடத்தில் பேணி யுரைத்ததையும்
சற்றும் நினேயாமல் தான்போனுள் ஊரருகே
அன்றே துயர்ந்தவனே யாரென்றும் பார்க்கவில்லே
ஆனதினு லென்குழந்தை அன்றுமுத லின்றளவும்
மாண்டபயல் கோட்டாலே வருத்தமிக வுண்டாச்சு
ஆரக்கட்டி யிப்போது அடியேன் சாம்பல் தாரேன்
வாங்கியே சென்று மறுவாரம் வந்திடுவாய்

### துலேயிற் போனவர்கள் வருவதற்குச் சொல்லுதல்.

ஏழு சமுத்திரம் இப்போது பார்த்தேனுன்
சத்த சமுத்திரத்தைத் தாண்டியே வந்தேனுன்
மலேமேலே வைத்த மணிவிளக்குப் போலாக
யென்குழந்தை தானு மிருக்கிரு னிப்போது
சம்பாத்தி யங்கள் தடைபெறவே செய்யுகிருன்
பாலனுக்கு யார்காவல் பார்த்திபனே நீகேளு
உன்வீட்டைக் கார்த்த உத்தமனும் சோணமுத்தும்
முத்துராக் கும்போயி முன்னே நின்று காப்பாற்றி
வைத்து இருக்கிருள் மகனே மயங்காதே
முள்ளு முரியாமல் முடித்தபூ வாடாமல்
கைப்பிடி யாகப்பிடித்துக் கார்த்துக்கொண்டு வாரேனுன்

### மகனுக்குக் கலியாணம் நடத்தச் சொல்லுதல்.

பெற்ற குழந்தைக்குப் பேரான கல்யாணம்
நல்லதினம் நடத்த நம்மைக் குறிகேட்டாய்

கோரினதோர் பெண்ணுங் குலமகளாங் கன்னியவள்
நல்ல பெண்ணென்று நானிலமுஞ் சொல்லிடும்பார்
இந்தப் பெண்ணாலே இலாப மிகக்கிடைக்கும்
முகூர்த்தநாள் பார்த்து முடித்துவிடு கல்யாணம்
இலட்சுமி யென்றபெண்ணு நேராயென் வீடுவரில்
செல்வம் பெருகிச் சிறப்புமிக வுண்டாகும்
வாழ்வு பெருகி மகிழ்ச்சிமிக வுண்டாகும்
மருமகளும்வீடு வந்தமூன் றுமாதம்
அதேமுழுக்காய் தானிருந்து அன்பானமைந்தனென்று
பெற்றுப் பெருகி பெரியகுடி யாயிருப்பாள்

மகளுக்குக் கலியாணம் நடத்தச் சொல்லுதல்.

என்பிறவி பெற்றெடுத்த ஏலக்கருங்குழலாள்
வயிற்றிற் செனித்தவுடன் வந்தது யோகந்தானும்
பிறந்த வுடனே பேரான செல்வமுடன்
நலமாகவந்து நானிலத்திற் றூன்பிறந்தாள்
இவளாலே செல்வம் ஏராள முண்டாச்சு
அனேகரிந்தப் பெண்ணை அடைவாகக் கேட்பமென்று
விரும்பி யலையுகிறார் மேலான சம்மந்தம்
கிடைக்குமின்னஞ் சொல்லுகிறேன்கிருபையுடன் நீகேளு
பெண்ணுக்குமாப் பிள்ளை பெருமையுடனே கிடைக்கும்
செல்வக் கலியாணஞ் சீராகவே நடத்து
மங்கள மாக வாழ்ந்திருப்பா ளுன்மகளும்
கால்வைத்த இடமுங் கனகசம்பத் துண்டாகும்
வேண்டிய மக்களை விரைவிலே பெற்றெடுப்பாள்

பேருகால மாவதற்குச் சொல்லுதல்.

மங்கையரின் கற்ப மயக்கத்தை நீகேளு
ஈரிரண்டு மாதமதில் என்வீட்டி னுள்ளேதான்
இந்தமங்கை தானும் இலைகுலுங்கா நேரமதில்
சாரி வரும்போது தான்வந்தா ளென்னெதிரே
ஓங்கினபோ டாய்ப்போட ஓங்கினவேளையிலே
இல்லரத்தைக் காத்த யென்பிறவி யோடிவந்து
என்குழந்தை யென்று யென்னிடத்தில் வேண்டியதால்

விட்டுவிட்டே னன்றுமுதல் வேண்டுஞ்சுகங்கொடுத்தேன்
கெற்பத்திற்குத் தோஷங் கனவிலுமே நேராமல்
குழந்தைக்குத் தோஷங் கொஞ்சமு மில்லாமல்
காத்து ரெட்சித்துக் காப்பாற்றி வைத்தேனுன்
ஊர்வழக்கம் போலே உடல்வலியு மேவலிக்கும்
பகவானால் கட்டவிழ்த்தால் பாலன் பிறந்திடுவான்
ஒன்றுக்கு மஞ்சாதே உத்தமியா ளென்போலே
குழந்தை பெறுவாள் குழப்பமொன்று மெண்ணாதே
சாம்பலைக் கொண்டு தான்போடு வீட்டினிலே
முள்ளு முறியாமல் முடித்தபூ வாடாமல்
காக்கிறே னென்று கைபோட்டுச் சொல்லுகிறேன்
வேறுபேய் வந்தால் விலகிவிடச் சொல்லுகிறேன்

### பேருகால மாவதற்கு இடஞ்சொல்லுதல்.

என்பிறவி யைக்கோரி யெண்ணிவந்தா யென்னுசான்
மாதமும் பத்தாகி வழக்கப் படியாக
குழந்தை பெறுவதற்குக் குறிப்பிட் டிடந்தானும்
எந்த விடமென்று யென்னைக் குறிகேட்டாய்
உன்னுடைய வீட்டில் ஒதுக்குப் புறமாக
தெற்குத் திசையில் சேர்ந்திருக்கும் வீடதனில்
வடக்குப் பக்கத்தில் மனமகிழ்சி யாகவேதான்
இடத்தை யொழித்து யென்குழந்தை வைப்பாய்நீ
பேருகால மாகிப் பிரியமுட னேகாத்து
தருகிறே னஞ்சாதே தவமியற்றி யீஸ்பரனும்
கட்டவிழ்த்து விட்டு கார்த்துக் கொடுத்திடவும்
வேண்டி வருகிறேன் வினைவியொன்று தானினைத்தாய்
சொல்லுகிறேன் கேளாசான் தொலைதூரம் போகணுமே
மனைவிகெற்ப மாக வருந்துகிறா ளெனவும்
போவமா வேண்டாமா போனாலுங் குற்றமுண்டா
வென்று நினைத்தாய்நீ வேறிடத்திற் செல்லாதே
பிள்ளை பிறந்தபின்பு பெருமையுடனேதான்
எங்குசென் றாலுந்தான் இதினாலே குற்றமில்லை
பிறவிக் கொருதுணையும் பின்துணைக்கா ளில்லாமல்

மயங்கவிட்டுப் போனல் வருபோ சுகந்தானும்
ஆனதினு லென்னுசான் அன்பாக வேயிருந்து
குழந்தையைக் கண்பார்த்துக் கூடிவழிசெல்லுமய்யா
இந்தா பிடிசாம்பல் என்குழந்தை வாங்குவாய் நீ

மகனுக்குப் பெண்கேட்கச் சொல்லுதல்

பெற்றெடுத்த பாலகனுக்குப் போரான கல்யாணம்
செய்து முடிக்கச் சிறப்பான பெண்கேட்க
இலைபாக்கு வைத்து என்னைக் குறிகேட்டாய்
மனதிற் குறித்தபெண்ணை மகிழ்வாக நீதானும்
இந்த வாரத்தி லியல்பாக நீபோயி
பெண்கேட்டால் தந்திடுவார் பேருலகோர் தானறிய
முகூர்த்தங்கள் பார்த்து முக்கியமா யன்றுதினம்
கலியாணஞ் செய்து கண்ணுலே தான்பாரு
நீகுறித்த பெண்ணுள் நேர்மையுட னுந்தனுக்கு
பிள்ளைபோ லேநடப்பாள் பெருமை மிகக்கொடுப்பாள்
அவளை நீ கல்யாணம் அருமையுடன் செய்துவைத்து
வீட்டுக் கழைத்துவந்தால் வேணசெல்வ முண்டாகி
மாமியா ளுக்கு வணங்கிமிக நடப்பாள்
மாமனுர் பார்த்து மகிழ்ச்சி யடைந்திடுவார்

மனையாள் பயந்து சீக்குவந்ததைச் சொல்லுதல்.

உன்வீட்டில் வந்த உத்தமியாள் பெண்ணனங்கு
இராத்திரியிலே வெளியில் நலமாகப் போம்பொழுது
சுடலை யுருவந் தோன்றினதைக் கண்டுமங்கை
கண்டு பயந்தாள் காய்ச்சல்மிக வுண்டாகி
அன்றிரவில் வாய்குழறி அனந்தவிதமான
சொற்பனமுங் கண்டு துயரமிக வுண்டாகி
அன்றுமுத லின்றுவரை ஆகாத சொற்பனமும்
காய்ச்சல் குளிருங் கண்டேனு னென்னுசான்
மாதுக்கு நேர்ந்த வருத்தமது தீருதற்கு
சுடலைக் கிப்போது சொகுசான பூசைதனை
செய்து முடித்தால் தீர்ந்துவிடும் இன்னமுங்கேள்
இதுவே குழியா யிருந்துபத்துத் திங்களிலே

சுதனையும் பெற்றுச் சுகமாக வேயிருப்பாள்
இந்தா பிடிசாம்பல் என்னுசான் வாங்குவாய்நீ

குழந்தை வேணுமென்றதற்குச் சொல்லுதல்.

மாதமொருபூவிந்த மரத்திலே பூப்பதுண்டு
சாதனை யாகுமது தான்வாச மில்லாமல்
போவதுண்டோவென்று போய்ப்பார்த்தேனென்னுசான்
ஆவதுதானென்று அறைவேனிசமாக
தாழைமலர் பூத்தால் தான்காயில் லாதிருக்கும்
வாழைமலர் பூத்த மகிழ்ச்சியோ டேயிருப்பாய்
சித்தமதி லின்னமுமோர் செல்வனில்லை யென்றுவிம்மி
மெத்தவு மென்மீதில் விசனமுற்று யிப்போது
இப்பிறை போனாலு மினிமேல் வருகுகிற
தப்பிறையைக்கட்டித் தருகிறே யென்னுசான்
அதுவே குளியாக அருந்திங்கள் பத்துமுற்றி
சுதனைப் பெறுவாள் சுகமாக இப்போது
சிந்திக்க வேண்டாம்நற் செல்வன் பிறந்தபின்பு
வந்திக்க நீயு மனைவியுமா யப்போது
சன்னிதா னத்திற் றரும்பூசனை புரிந்தே
பொன்னு லயவாசற் பூமரத்திற் ருமிருவர்
தார்வைத்த தொட்டிகட்டித் தாலாட்டி மைந்தனுக்கென்
பேர்வைப்பா யிந்தா பிடிவலக்கை யென்னுசான்

கருப்புக் கண்டதைச் சொல்லுதல்.

இல்லத்திற் தானு மிருக்கின்ற பெண்கொடியாள்
சோர்வு அடையத்துரை கண்டே னோர்வசனம்
இலைகுலுங்கா நேரமதில் இந்தமங்கையாள்தானும்
கணவனுடன் சேர்ந்து கண்மயக்கந் தூக்கமுடன்
வெளியே வரும்போது வெகுவினோதமாக
பூக்குடலை தூக்கி இருளன் போகுமந்த நேரமதில்
கண்டு பயந்தாள் கண்கொள்ளாக் காட்சியுடன்
மாது பயந்தாள் மகாமுனியுந் தான் துயர்ந்தான்
அந்தக் குறையை அகற்று ததினாலே
காயிருக்கப் பூவு காணமற் போவதினுல்

ஈரிரண்டு மாத மிருந்ததொரு கெற்பமதை
உதிரம் உதிரமதாய் ஊற்றும் படியாச்சு
இந்தத் தடவை யென்று யெண்ணாதே முன்னடி
அநேக தடவை அழிந்தது கெற்பந்தானும்
விபரந் தெரியாமல் விளம்பியும் பாராமல்
காலக் கிரகமென்று கவனிக்காதே யிருந்தாய்
தீர்த்துத் தருகிறேன் திடஞ்சொல்வே னஞ்சாதே
காத்துக் கொடுக்கிறேன் கைபோட்டுத் தாரேனிதோ
மயானத்தில் பூசை வகையுடனே தான்போட்டால்
சுடலைதனை விலக்கிச் சுகந்தருவே னென்னுசான்
இந்தா பிடிசாம்பல் யென்குழந்தை கத்தாதே

ஓடிப்போனபெண் வருவதற்குச் சோல்லுதல்.

என்பிள்ளை தானு மெனக்குத் தெரியாமல்
வழிதவறிப் போன மார்க்கந் தெரியவென்று
குறிகேட்போ மென்று குறிப்பிட்டா யென்னுசான்
ஒக்களு மக்களும் ஒருகுழைக் காயினிலே
வம்ப னொருவன் மயங்கவே செய்துவிட்டான்
மயக்கத் துடனே வழிபிசகிப் போனாள்காண்
இந்தக்கீழ் திசையி லிருக்கிறாள் பெண்கொடியும்
மாத்தா னொருவன் வழிபாடு செய்தான்காண்
மாத்தானல் குற்றம் மங்கைக்கு யில்லையடா
வழிதெரி யாமல் மயங்கி யிருக்குகிறாள்
யென்காவல் தன்னி லிருக்கிறாள் மாறாமல்
துன்ப மெல்லாந் தீர்த்து சுகமா யிருக்குகிறாள்
யென் பிறவிபோயி யிப்போ தழைத்தாக்கால்
கூடவே வந்திடுவாள் கொஞ்சமேனு மஞ்சாதே
சந்தேகம் விட்டு சாம்பலை நீபிடியும்

வியாதி தீருதற்குச் சோல்லுதல்.

என்பிறவி சீக்கு இதமாகத் தீருதற்கு
குறிகேட்போ மென்று கோறிவந்தா யென்னிடத்தில்
நாட்டுப் பிணியல்ல நாம்தேடிக் கொண்டதிது
பெண்மாய்கை யால்வந்த பெரியதொரு சீக்காகும்

இந்தப்பெருஞ் சீக்கு இயல்பாகத் தீருதற்கு
வைத்திய னாலே மருந்து கொடுத்துவிடு
சவுக்கிய மாக்கி தான்வைக்கி றேனானும்
பத்தியத் தோடிருந்தால் பண்பாயோர் வாரமதில்
குணமாக்கி நான்தாரேன் குறையொன்று மில்லையப்பா
மாதக் கடோசியினில் வந்தென் னிடத்தினிலே
தெரியப்படுத்து தீர்மானஞ் சொல்லுகிறேன்

## போனபொருள் வருமாவெனக் கேட்டதற்குச் சொல்லுதல்.

கையைவிட்டுப் போனபொருள் கைக்குவரு மாவெனவே
தன்மைதனைக் கேட்கத் தான்குறிகள் வைத்தாய்நீ
கடந்த பொருளுங் கைக்கெப் படிவருகும்
வீடுவிட்டு வீடு வேறே ஒதுங்கினது
வேண்டுமென்று செய்த மெய்மோச மானதிது
துப்புபோ லேதான் சோரங்கள் போனதிது
மாத்தான் வரவுமில்லை வம்புக ளேதேனுமில்லை
பார்த்திருந்து செய்த படுமோச மானதிது
போனபொருள் கைக்குப் புலப்படா திப்போது
ஆளக் குழிதோண்டி தாளப் புதைத்ததுபோல்
ஒருவருக்கும் தோணும லுள்ளே புதைத்தது வைத்தாய்
மனதிற் கவலையை நீ வையாதே விட்டுவிடு
இப்பொருளைப் போலே இருபங்கு நான்தாரேன்
அடுத்தமா தத்தினிலே அனேகபொருள் வந்துவிடும்
பொருள்கடத்தி னோயிரை போக்குகிறேன் நீபாரு

## கனவு கண்டதைச் சொல்லுதல்.

மாடுகளை மேய்த்தேன் மனையில் படுத்திருந்தேன்
சுழுத்தி தனில்மனது சொக்கி யிருக்கையிலே
கனவுகண்டு நானெழுந்து கதைசொல்வே னென்றுசான்
மழையானது பெய்ந்து மழைத்தண்ணீர் தான்திரண்டு
ஆறாய்ப் பெருகி அதுவருகும் போதினிலே
தண்ணீர் கடக்கத் தான்முடிய மாட்டாமல்
காத்தாய்ப் பறந்து கடந்துவந்தேன் ஆறுதனை

சாதாரணமாய்த் தானிருக்கும் போதினிலே
பூமி யசைந்து பூலோகத் தில்விழவும்
நிலத்தி லனேகம் பயிர்கள் நேர்மையுடன் செய்கையிலே
பயிரில்லாதே போகப் பார்த்துவந்தே னென்னுசான்
கனவுகண்டு மெய்பதறிக் கண்கலங்கும் போதினிலே
சுடுகாட்டி லேதான் சுடுபிணத்தைப் போயிழுத்து
பிணந்தின்னும் பேச்சிபிணம்பிடுங்கித் தின்கையிலே
பத்துமா தஞ்சுமந்த பாலகனை யிப்போது
குத்திக் குடல்பிடுங்கி குலவையிடும் வேளையிலே
சர்ப்பம்வந்து தான்பாயத் தான்கண்டே ஞேர்வசனம்
வானில் வெளிச்சமுடன் வந்து தனலெறிய
கண்டே ஞேர்தீர்மானங் கன்னியொருத்தி வந்து
நகையைப் பறிக்க நான்கண்டே ஞேர்வசனம்
வானி லிடிவிழுந்து மயங்கிநிற்கும் போதினிலே
சிங்க மொன்று வந்து சீறி விழுந்ததுபோல்
புலியொன்று வந்து போய்ப்பாய வந்ததுபோல்
நாய்கண்டு தான்விரட்ட நான்கண்டே ஞேர்வசனம்
அழுது குரலாக அருங்குரலாய்க் கன்னிகையும்
அழுது வரவும் அவளையங்கு தான்விரட்டி
சற்றே மயிர்பிடித்துத் தள்ளிவிடக் கண்டேனுன்
வீட்டுச் சுவரிடிந்து மேல்விழுந்த பாவனையாய்
யானைவந்து தான்பிடிக்க அதற்குநான் தப்பிவந்தேன்
புதுப்புடவை கட்டிப் பூமுடித்துப் பார்ப்பதுபோல்
கனவுகண்டு தானுங் கண்விழிக்கக் கண்டேனுன்
இந்தக் கனவை என்னிடத்திற் கேட்கவந்தாய்
முள்ளு முரியாமல் முடித்தபூ வாடாமல்
காகம் பறவாமல் காப்பாற்றி நான்தாரேன்
சாம்பலை வாங்கித் தான்செல்வா யிப்போது

### கலியாணம் நடத்தச் சொல்லுதல்.

மணமாலை செய்ய வந்துயென்னைக் கேட்டாய்நீ
பிள்ளைக்கு மாலையிடப் பிரியமடா யென்னுசான்
செல்வக் கலியாணஞ் செய்துவைத்துப் பார்க்குகிறேன்

ஒருகுறையு மில்லை உத்தமனே கேளாசான்
பெண் ணுடைய மாமன் பிரட்டுருட்டுச் செய்குகிருன்
வேறே யிடம்நாடி வேண்டித் திரிகுகிருன்
ஆட்டி வைக்கிறேன் நான் அப்புறமாகட்டு மிதோ
பெண்ணைப் பெற்ருர் மனம்போல் பிரியமாய்க் கல்யாணம்
நடக்குமென் றுகம்பையிலே நான்சொன்னேன் தீர்மானம்
தீர்மான மாகத் தீர்த்து முடிக்குகிறேன்

களவுபோனதைச் சொல்லுதல்.

சோரம் நடந்தவிதம் சொல்லவோ யென்ஞசான்
மறுதேசத்தி லிருந்து வந்துவிடலைத் திருடன்
இல்லிடம் பூமி யிருப்பாகு மத்தலத்தில்
ஒருகுலைக் காயில் ஒட்டிப் பிறந்ததொரு
தாயாதிக் காரன் சதிசெய்தா னேர்வசனம்
கையைவிட்டுத் தானுங் கடந்துவெளி யேறியது
மாத்தான் மனையில் வைத்திருக்கிரு னவனும்
மயிலே இறகு வலியக்கொ டென்ருக்கால்
எப்போ துனக்கு இறகு கொடுக்குமப்பா
ஆகையால் நா னு மவனையிங்கு காட்டுகிறேன்
கைப்பிடி யாகப்பிடித்து காவலிலே வைக்குகிறேன்
உன்னை யறியாமல் உன்வீட்டில் போட்டிடுவேன்
உன் பொருள் வந்து உனக்குக் கிடைத்த பின்பு
இன்ன னெனவே யிவன்பேருஞ் சொல்லுகிறேன்
இப்போது சொல்ல யெனக்குமன தில்லையடா
மச்சத் துடனே வகையாய்க் கொடுத்தபின்பு
ஒருவாரஞ் சென்றதன்பின் ஓடிவா யென்ஞசான்
சந்தேக மானவர்க்குச் சாம்பல் கொடுத்துவிடு

சூனியம் வைத்ததைச் சொல்லுதல்.

காணி வழக்கிற் கருதிநெடு நாட்பகையாய்
ஊ னு மெதிராளி யுனக்குண்டே யென்ஞசான்
தீவினையாஞ் சூனியத்திற் தேர்ந்தூற் காரனிடம்
போய்வருந்தி வேண்டும் பொருளு மிகக்கொடுத்து
மாரணத்தி னுலுமொரு மாப்பாவை பண்ணிவெகு
காரணத்தைச் செய்து கடைசியா யப்போது

உன்செய் தலத்தி லொருமூலைப் பாரிசத்தில்
புன்செயிலுந் தாபித்துப் போய்விட்டா னன்றுமுதல்
நற்குடிக்குத் துன்பமடா நாளும் பலயிழவை
பொற்கொடிக்கு நேர்ந்த புலையாட்டுச் சொல்லுகிறேன்
அத்த கினவும் அதிரடியும் சொற்பனமும்
நித்திரையில் வாய்ப் புலப்பம் நேரான கன்னியர்க்கு
நின்றது நின்றுப்போற் நெடுமூச்சு மெய்மயக்கம்
இன்றே டொழிந்ததப்பா யென்னுசா னஞ்சாதே
மாடுகிடா கன்றுபசு மாடுவண்டி மாடுகளும்
ஆடுமுதல் சீவனையும் அன்பாய்க்காப் பாற்றிவைத்தால்
அடையாளம் நல்குவையா அப்பாவுன் வாய்திறந்து
சடையாமற் சொன்னால் தருவேன் சுகந்தானும்

## மகனுக்குச் சீக்குத்தீரச் சொல்லுதல்.

இல்லிடம் பூமி யிருப்பாகு மத்தலத்தில்
நல்லதொரு சாமத்தில் நானிருக்கும் வேளையிலே
மாத்தா னுழைந்து வகைமோசஞ் செய்துவிட்டு
என்குழந்தை தன்னை இடறுகள் செய்ததினால்
என்னிடத்தில்வந்து இதைத்தெரிவோ மொன்றுசொல் [லி
பாக்குவைத்துக் கேட்ட பட்சமுள்ள யென்னுசான்
வேறே யொருவன் விரும்பிவர வில்லையடா
கம்பையில் சேர்ந்த கனத்ததொரு சோனைமுத்து
வம்பனும் வந்து வாய்குழறச் செய்துவிட்டான்
இன்றுமுதலாக இருபத் தொருநாளில்
சுகமுங் கொடுக்கிறேன் சுற்றத்தார் தன்னுடனே
என்னுடைய யெல்லையினில் இருபத்தொரு தேங்காய்கள்
உடைத்துப் படைத்து உகந்த வாழைப்பழமும்
மயானத்தில் பூசை வகையுடனே தான்போட்டு
ஆசானை வேண்டி ஆலயத்தில் பூசையிட்டால்
பாலகன்றன் சீக்குப் பஞ்சாய்ப் பறந்துவிடும்
இந்தா பிடிசாம்பல் இப்போ சுகந்தானே

## கைக்குழந்தையின் சீக்கு தீருதற்குச் சொல்லுதல்.

சிசுவுக் கிப்போது சீக்கதுவுங் கண்டுமிப்போ
வாட்ட மடைய மலைகண்டே னோர்வசனம்

என்ன வாட்டமென்று என்னைக் குறிகேட்டாய்
பாலுங் குடியாமல் பக்குபக் கென்றேதான்
தொண்டை நெரித்து சுழன்று கிடக்குதப்பா
வயிறுகொஞ்சம் ஊத்தமதால் வாய்திறக்க வில்லையடா
கொப்பளம்போ லாகக் கொப்பளிப்ப தென்னவென்றும்
அழுகைக் குறலும் அமர்ந்திருப்ப தென்னதென்றும்
ஆசா னிடத்தி லதுவிபரங் கேட்பமென்று
எண்ணிவந்தா யென்னுசானிதன் விபரஞ் சொல்லுகிறே
வெள்ளிடி போலாக விழுந்து கிடக்கிறது [ன்
கிணறிடிந்த பாவனைபோற் கிடக்குதிப்போயென்குழந்தை
குழந்தை வேணுமென்று குறிப்பிட்ட நாளதனில்
என்பேரைவைப்பேனென்று எனக்குமுன்சொல்லிவிட்டு
தாய்பேரை வைப்பமென்று தான்சொன்னு ளோர்வசனம்
அதுவும் பொறுத்தே னுவதொன்று மில்லையிப்போ
மடிப்பிச்சை கேட்டு வாங்கினுன் வாரேனிதோ
எட்டுநாள் தள்ளி யென்னுசான் கார்த்திடுவேன்
சாம்பலை வாங்கித் தான்போடு வீட்டினிலே
முள்ளு முரியாமல் முடித்தபூ வாடாமல்
காகம் பறவாமல் காப்பாற்றித் தாரேனிதோ

துருசுப்பேயடித்த விபரஞ் சோல்லுதல்.

ஏண்டா மயங்குகிருய் என்மகனே கத்தாதே
தாவரத்திற் சென்று தான்பார்த்தேன் தீர்மானம்
மன்னனுக் கிப்போது வாட்டம்வரக் கண்டேனுன்
நேற்றிரவில் பூமுடித்து நெஞ்சத்தி லொன்றையெண்ணி
மாதிடத்திற் சென்று மருவி யிருந்துவிட்டு
ஈரசந்தி வேளை யிருள்கவிந்த வேளையிலே
ஒருவன் தனியனு மொன்று நினையாமல்
பாதை வழியாக பாலன் வருகையிலே
மதுரைவீரன் காவல் வலமாய் வருகையிலே
யெதிர்பட்டுக் கொண்டான் ஈரசந்தி வேளையிலே
வாயில் நூரைப்பரிய மண்ணை யடித்துவிட்டான்
ஆகையா லென்னுசான் அடியே னிடத்தினிலே
குறிகேட்போ மென்றுவந்தாய் குறித்ததொரு காரியத்தில்

வடுப்பட மாட்டாது அந்த மங்கையவள் கையாலே
தீர்த்துவிட வேண்டுந் தீர்மானஞ் சொன்னேனுன்
கம்பைக் கொருபணத்தைக் கட்டி முடித்துவிடு
சாம்பலைக் கொண்டு தான்கொடுப்பா யிப்போது

கடன் தீருவதற்குச் சொல்லுதல்.

கடன்வந்து விட்டதென்று கருத்தில் மிகநினைந்து
இலைபாக்கு வைத்து என்னிடத்தி லேகேட்டாய்
கடன்தீர்த்து வைத்தால் கைக்குவளை போடுவையா
மாசப் பிறப்பும் வந்த அஞ்சாந் தேதியன்று
ஈரஞ்சு மூவஞ்சும் இருபதாந் தேதியன்று
கார்த்திகை ரோகணியும் கண்ட பௌரணையும்
நல்லவயா வாசையென்றும் நலமான சீட்டுகளில்
போட்டு வருகிறையா புதுமை யுடனேதான்
சீட்டெடுத்து நான்தாரேன் தீர்க்குறே னுன்கடனை
வரவேண் டியகடனை வாங்கியே நான்தாரேன்
வியாபாரத் தன்னில் வெகுலாப முண்டோடா
மாடுகன்று காலி மனைவிமுதல் யாவருக்கும்
சுகமென்றுசொல்லுவையா சொந்தநல்லவெள்ளாண்மை
நல்ல விளைவுண்டா நான்சொன்னேன் கேட்கவில்லை
காலக் கிரகமென்று கதறினையே இப்போது
காலக் கிரகத்தைக் காற்றாய் பறக்கடித்து
எடுத்ததொரு காரியத்தில் ஏராளமாய் லாபம்
கொடுக்கிறே னஞ்சாதே கூடவே நானிருந்து
சீட்டு மெடுத்துத் தீர்க்கிறே னுன்கடனை
மற்றொன்று மெண்ணாதே வாங்கு விபூதிதன்னை

நகைகள் ஆபரணங்கள் செய்வதற்கு சொல்லுதல்

என்பிறவிக் கிப்போ இசைந்தநல்ல ஆபரணம்
செய்து முடிக்கத் திரங்கேட்டு வந்தாய்நீ
இந்தச் சமயம் என்னுசான் நீகேளு
நகைகள் செய்யாதிருந்தால் நானிலத்தோ ரேசாரோ
கைப்பணமும் போயிவிட்டால் காரியமும் ஓடாது
இப்பொழுதே நகைக ளியல்பாகச் செய்யுதற்கு
தங்கத்தை வாங்கித் தான்கொடுப்பாய் விஸ்வனிடம்

எட்டுநாற் குள்ளே இந்த நகைமுடித்து
போட்டழகு பார்த்துப் புகழ்பெருவா யிப்போது
நகைமேல் நகைகள் நங்கையர்க்குத் தான்சேரும்
பொருள்மேற் பொருள்கள் புகழாக வேசேரும்
வீட்டுத் தெய்வத்திற்கு விரும்பியொருகாசு
சாம்பிராணி போட்டுத் தான்வணங்கிக் கொள்வாய் நீ
குழந்தைக்கு நேர்ந்த கொடுமைமிகச் சொல்லுகிறேன்
மலையிலே சென்று வரும்போது யென்னுசான்
காட்டு வழியாகக் கடந்து வருபொழுது
செடியுங் கொடியுஞ் சேர்ந்த விடந்தனிலே
காலி சுருக்கிடவுங் கண்டேனு னோர்வசனம்
என்னவென்று சொல்லி யென்னுசான் கேட்டாய் நீ
சர்ப்பமொன்று போலத் தானங் கிருந்திடவும்
வாயாற் கடித்ததுபோல் மலைகண்டே னோர்வசனம்
ஆனாலு மின்னமொரு ஆச்சரிய மெத்தவுண்டு
பலவித மான பாம்பா யிருந்தாலும்
சில்லுவிஷங் கள்தானும் சிறிதா யிருந்தாலும்
பலவித ஜெந்துவிஷம் பாங்கா யிருந்தாலும்
மலையை வணங்கி வருகின்ற தீர்த்தமதில்
குளித்து முழுகக் கொடியவிஷந் தான்தீர
புலியூருச் சித்தனை நீ புந்திதனி லேநினைத்து
தீர்த்தங் குடித்தால் தீர்ந்துவிடு மிந்தவிஷம்
இந்தா பிடிசாம்பல் இதுதான்பார் தீர்மானம்

## கோர்ட்டுப் பிராது சொல்லுதல்.

உனக்கும் எதிரிக்கும் உடன்பிராது நடத்த
வழக்குகளைச் சொல்வேன் மயங்காதே யென்னுசான்
கோர்ட்டி லெதிரி கொடுத்த பிராதுகளை
வாங்கிநான் பார்த்தேன் வகைமோசம் போய்விட்டான்
யென்னவித மோசமென்று யென்னைக் குறிகேட்டாய்
வாதிவக்கீல் கேட்ட வாக்குமூலப் படியே
தாறுமாறு யுளறித் தான்கொடுத்தான் பெட்டிஷன்
நாலுபேர் மெய்க்க நலமாய்க் கொடுத்ததொரு
வாக்கு மூலத்தை வாங்கிநான் பார்த்துவந்தேன்

அனுகூல மென்று அறிந்துவந்தே னென்னுசான்
உன்னுடைய சாக்ஷி உளறிவிட்டா னென்றேதான்
மனதில் நினையாதே வகைமோசம் போகுமென்று
அதினாலேமோசமில்லை அதைப்பார்த்துக் கொள்ளுகிறே
எப்படி யாவது இடர்தீர்த்து வைக்குகிறேன் [ன்
வழக்கைச் செயமாக்கி வைக்குகிறே னஞ்சாதே
ரு தும்வழக்கு ஜெயித்தால் கைக்குவளை போடுவையா
ஆகையால் நானிருந்து அடிக்குகிறேன் தீர்மானம்

## சாமிகும்பிடத் தவறிப் போனதைச் சொல்லுல்.

நல்ல திருக்கட்டும் நான்சொல்வேன் கேளாசான்
எல்லவருஞ் சேர்ந்து யென்னு லையவாசல்
கம்பையிலே வந்து கையெடுப்போ மென்றேநீ
வருகிறவெள்ளி வாரமதில் நாள்பார்த்து
கும்பிடுவதென்று குறிப்பிட் டிருந்தாய்நீ
அதுபோல வந்து அடைவாய்க் கும்பிட்டாயா
போகட்டு மிந்தப் புதுமைத் தினத்தினிலே
வாங்கின சாமானை வைத்துப் படைப்போமென்று
கோரிவந்தாயென்னிடத்தில் நறிப்பறிந்தேனோர்வசனம்
பூசாரி தானும் போயினு னூர்தனக்கு
ஆசானீ யென்று அல்லவருந் தானறிய
நேமித் திருக்க நெடுகளுநீ யெந்தனுக்கு
பூசை புரிந்தாயா போனவருடம் போலே
கையெடுத்து நீயுங் கனபிரிய மாகவுமே
ஆசானை வைத்தால் அப்பனே உன்குலத்தைக்
கார்த்து வருகின்றேன் காரியமுஞ் சித்தியதாய்
பார்த்து வருகின்றேன் பதறாதே யென்னுசான்
முன்வாங் கினசாமன் முற்றிலும் தள்ளிவிட்டு
வேறு சமாமான்கள் விரைவினிலே தான்வாங்கி
இனிமே லிதுபோல யிராதே நீ யென்னுசான்
வருடா வருடம் வருமுன்னே கையெடுக்க
பிரயத்த னப்புரிந்து பேணியே கையெடுப்பாய்
தருவேன் சுகங்கள் தவறாம லிப்போது

### சாமி கும்பிடச் சொல்லுதல்.

குடும்பத்தைக் காத்த குலதெய்வ மானதையும்
கையெடுக்கவேணுமென்றுங் கர்த்தனிடம் போகவென்று
கேட்டுவந்தாயென்னுசான்கிருபையுடன்சொல்லுகிறேன்
இருபத்தோர் பந்தியினி லெங்கும் நிறைந்திருக்கும்
அய்யன் பந்திதன்னை யன்பாகக் கும்பிடு நீ
கன்னிமார் தேவதையைக் கையெடுக்க வேணுமென்றும்
பேச்சிதனைக் கும்பிடவே பேணிவந்தா யிப்போது
ஆவுடை யம்மாளை அப்பனை கும்பிடலாம்
மலையிலே ராக்கு வருந்துகிறு ளிப்போது
கோட்டை மலையானைக் கும்பிடவும் நிநினைத்தாய்
கருப்பனைக் கும்பிடவே கருத்தில் மிகநினைத்தாய்
யென்னிடத்தில் வந்து யென்னைக் குறிகேட்டாய்
தெய்வத்தைக் கும்பிடவே செப்புகிறே னிப்போது
முப்பூசை போட்டு முப்பழமுந் தான்படைத்து
மனதி லிருக்கும் வருத்தங்களுந் தீர்ந்து
சுகமா யிருக்கச் சொல்லுகிறேன் கேளாசான்
சாமியைக் கும்பிடு தக்க சுகந்தாரேன்

### சாமி பிரார்த்தனையை நடத்தச் சொல்லுதல்.

இன்னமொரு சேதியொன்று எண்ணி யிருக்கின்றாய் நீ
ஆண்டிக் கிப்போது அருமை யுடனேதான்
காவடி யெடுக்கக் கருத்தில் நினைத்தாய் நீ
என்ன காவடிதா னெடுப்போ மெனக்கேட்டாய்
சர்க்கரைக் காவடிகள் தானெடுப்பார் ஊரிலுள்ளோர்
பால்காவடிகள் பாரிலுள்ளோர் தானெடுப்பார்
பன்னீருக் காவடியும் பச்சிள நீர்க் காவடியும்
பச்சநல்ல காவடியும் வகையாக வேயெடுப்பார்
சாம்பிராணிக் காவடியும் சர்க்கரைக் காவடியும்
பூக்கா வடியும் புனல்தீர்த்தக் காவடியும்
விபூதியின் காவடியும் வேர்க்காவடிகளையும்
சேவல் காவடியும் சிறப்பா யெடுத்தாலும்
எனக்கு பிரியம் இளநீரின் காவடியாம்

சொல்லு மிடத்திற் துரிதமுடனே வாங்கி
குடலையிற் போட்டு குவலையத்தோர் தாமறிய
ஊரறிய நீயும் உறவின்முறை யாருடனே
மயேசுவர பூசை வகையாகவே நடத்தி
ஆண்டிக் கபிஷேகம் அருமையுடன் செய்துவைத்து
வரவே ணுமென்று மனதில் நினைத்தாய்நீ
நினைத்தபடிக் கிப்போது நீநடத்த உத்தரவு
தந்தோம் விபூதி தான்வாங்கிச் செல்லுமையா

அசலூருக்குப் போய்வருவதற்குச் சொல்லுதல்.

என்வீடு வாச லிதமாக வேபோட்டு
அசலூரு போய்வருதற் காறுதலை நீகேட்டாய்
என்வீட்டுக் குக்காவல் என்னெஜமான் றனிருந்தும்
உனக்குச் சந்தேகம் உற்றபடி வந்ததென்ன
பொன்பொருள்கள் யாவும் போட்டுவிட்டுப் போரோமே
ஏதாவது மோசம் இயல்பாய் நடந்துவிட்டால்
என்செய்வோமென்று என்னைக்குறிகேட்டாய்
ஒருக்காலும் மோசம்வரா துரைவசனந் தப்பாது
நாட்டுக்கதிகாரி என்னைபெற்றூன் நல்லமலைக் கிதாரி
படிவாசல் காரன் பார்த்திருப்பான் இப்போது
காகம் பறவாமல் கருங்குருவி நாடாமல்
காவல் பதனமாய்க் கார்த்திருந்து வாரேனுன்
ஊருக்குப் போயி உடன்காரியம் பார்த்து
சீராக ஊருவந்து சேரும்வரை கார்த்திருப்பேன்

மனைவீடு வாங்குவதற்குச் சொல்லுதல்.

தாவரமா மென்னுந் தன்மை யுடையதொரு
மனைவீடு வாங்குதற்கு வந்துகுறி கேட்டாய்நீ
மன்னனுக்கு முன்னோர்கள் வைத்திருந்த வீடதனை
காலப்பலனுல் கருத்துக் கிசைந்தபடி
வீட்டைக் கொடுத்து வெளியேறி வந்தமுதல்
அந்தநாளுந் தொடங்கி அரசன் மனதுள்வைத்து
வீடது வாங்கி வெகுவா யிருப்பதற்கு
மனைவீடு பார்த்து வந்து குறி நீகேட்டாய்
இந்தநல்ல வீடு எனக்குப் பிடித்தாலும்

வில்லங்கமான விசைய மிருக்கிறது
கோர்ட்டில் நகலெடுத்துக் கொண்டுவரச் செய்திடுநீ
அதிலிருக்கும் வில்லங்கம் அகப்படு மஞ்சாதே
வில்லங்கக் காரனையும் விரும்பிச் சரிப்படுத்தி
காப்பாற்றி தான்தாரேன் கருத்தாக நீயிருந்து
கிரைய முடித்துவிடு கிருபையுட னிப்போது

மனைவீடு கட்டச் சொல்லுதல்.

நல்லமனையும் நான்பார்த்தே னென்னுசான்
இந்த மனையை என்மனையென் றெண்ணுவை நீ
முந்தாநா ளுன்கனவில் முதற்சாம நேரமதில்
மல்லிகைப் பூமாலை வந்துகழுத் திற்போட்டேன்
இன்னமும் தான்யோக மிருக்குதுகாண் பின்னுடி
வருகிற வைகாசி மாசம் மனைமுகூர்த்தம்
செய்து அடுத்தமனை சேர்க்கையாய் வாங்கிடுவாய்
வீடுமுதல் கட்ட வெகுவேலை தான்நடக்கும்
பணச்சிலவென் றெண்ணிப் பாராதே யென்னுசான்
வேண்டும் பணங்கள் விரைவாக நான்தாரேன்
சித்தமதி லின்னமொரு சேதி நினைத்தாய் நீ
நினைத்ததொருகாரியமும் நேர்மையாய்ச்சொல்லுகிறேன்
இந்த மனையி லிதற்குமுன் னிருந்தவர்க்கு
குழந்தை யில்லையென்று குறிப்பிட்டா யென்னுசான்
அதைநீ நினையாதே அவன்லபிதம் அவ்வளவு
தானென்று நீநினைப்பாய் தக்கபடியாக
வேண்டுங் குழந்தை வெகுவாக நான்தாரேன்
வீடுமுதல்கட்டி விளக்குமுத லேற்றிவைத்து
குடியேற்றி வைத்துக் கொடுக்கிறேன் லாபமெல்லாம்

வேறுவீடு குடிபுகச் சொல்லுதல்.

இவ்வளவு நாளா யிருந்துவந்த யில்லம்விட்டு
வேறு வீட்டுக்கு விரும்பியே போவதற்கு
என்னிடத்தில் வந்து யிதுவிபரங்கேட்பமென்று
வந்தாய்நீ யென்னுசான் மனம்போலே யிப்போது
குறிப்பிட்ட வீடு குடிபுகவுஞ் சம்மதந்தான்

மதிப்பிட்டு நல்ல மாதங் கடைசிதனில்
நல்லநாள் பார்த்து நலமாய்க் குடிபுகுவாய்
சேமங் கிடைக்குந் தெய்வபல னுண்டாகும்
மக்களைப்பெற்று மகிழ்ச்சியுட னேயிருப்பாய்
பிள்ளைகளைப் பெற்றுப் பெருமை யடைந்திடுவாய்
வருகும் வருடத்தில் மனைவீடு நான்வாங்கித்
தருகிறே னஞ்சாதே தப்பிதங்கள் வாராது

மனைவீட்டைக் கொடுத்துவிடச் சொல்லுதல்.

ஆசான்றுன் வைத்திருந்த அந்த மனைவீட்டை
கொடுத்து விடுவதற்குக் குறிப்பிட்டு நீகேட்டாய்
இப்போதுன் வீட்டுக் கிடதுபுர மூலையிலே
கருப்பு இருக்கிறது கவனிக்க வில்லையதை
அந்தக் கருப்புசெய்த அனியாய மெத்தவுண்டு
ஆட்டிவைத்துக்கோட்டிசெய்து அஞ்சியிருக்கும்படியாம்
வீட்டுக்குள்ளே யிருந்து வெகுபாடு செய்துவிட்டான்
ஆகையா லிப்போ அரசன் மனம்போலே
வீட்டை யொருவனுக்கு விட்டுவிடு பின்னாலே
இல்லமொன்று வாங்கி இனிமையுடன் வைக்குகிறேன்
வீட்டில்வந்த ரூபாயை மிகுசெலவு செய்யாமல்
பதனமாய் வைத்திருநீ பண்பாகவேதானும்
அருமை யுள்ளவீடு அன்புடன் வாங்கித்தாரேன்

நிலம் வாங்குவதற்குச் சொல்லுதல்.

பயிர்செய்வ தற்குப் பச்சமுட னிப்போது
நிலம்வாங்கவென்று நினைத்து யென்னைக் கேட்பமென்று
உறுதி திறங்கேட்க உத்தமனே வந்தாய்நீ
வாங்கலா மென்று மனதில் நினைத்துவந்தாய்
நஞ்சைபுஞ்சை தானும் நானும்போய்ப்பார்த்துவந்தேன்
குறைவொன்று மில்லை குறிப்பாக வாங்கிடலாம்
இன்னுமொரு காரியந்தா னிருக்கிறது யென்னுசான்
ஆடையுங் கோடையும் அப்பா விளைவுதற்கு
கண்மாயில் தண்ணீர் கட்டலா மென்றேதான்
இடம்போய்த் தண்ணீர்க ளிருக்குமிடம் பார்த்தேன்

ஆகையி னாலே அப்போதைக் கப்போது
மழைபெய்யுங் காலம் வருகின்ற தண்ணீரை
வைத்துப் பயிர்செய்து வரவேணு மிப்போது
நல்ல துனக்கு நலஞ்செய்து வைக்குகிறேன்
கிரைய முடித்துவிடு கிட்டவே நானிருந்து
பயிர்செய்து வைத்துப் பார்க்குகிறே னென்னுசான்

தோட்டம் வைத்துப் பயிர்செய்யச் சொல்லுதல்

தாவரமென்று சாற்றினதுந் தோணலையா
இல்லிடம் பூமி யிருப்பாகு மத்தலத்தில்
புன்செய் தலத்தில் போய்த்தோட்டம் வைப்பமென்று
யெண்ணி யிருக்கின்ரு யென்னுசான் கத்தாதே
வாழை கமுகு வைத்தால் பயிராகும்
கரும்புநல்ல தோட்டம் கருத்துடனே வைத்தாக்கால்
அரும்பு குறையாம லதைக்கார்த்து நான்தாரேன்
தேங்குபலா மாதளையும் திரமுடனே வைத்தாக்கால்
ஓங்கி விளையும் உனக்குநான் சொல்லுகிறேன்
தானிய வர்க்கந் தான்விதைத்தால் நல்விளைவு
விளையுமென்று உந்தனுக்கு விளம்பினேன் முன்னுடி
கார்த்துத் தருகிறேன் கைபோட்டுச் சொல்லுகிறேன்

நஞ்சை புஞ்சை விளைவுகளைச் சொல்லுதல்

தாவரத்தைக் கோறி தான்கேட்டா யோர்வசனம்
தாவரமென்று லுனக்குத் தான்தெரிய வில்லையடா
நஞ்சை புஞ்சை யென்று நானிலத்தோர் சொல்வார்கள்
அந்தநஞ்சை தானும் அதிவிளைவுண் டாமெனவே
இந்தவரு டந்தானும் வராள மாகவேதான்
விளையுமா வென்று வினைவியென்னைக் கேட்பமென்று
பாக்கு வைத்துக் கேட்ட பட்சமுள்ள யென்னுசான்
நாளிருக்கும் போது நல்லவிளை வுண்டாக
கேட்க வாவேணுங் கீழ்புரத்து நஞ்சையிலே
வாட்ட மிருக்குதென்று மலையிடத்திற் கேட்பமென்றும்
வந்தாய்நீ யென்னுசான் மயங்காதே யிப்போது
வாட்டத்தைத் தீர்த்து மயக்கமும் போக்குகிறேன்

ஒருமரக்கால் நெல்லை மலைக்கு உடனே கொடுத்துவிடு
குடும்பசாப் பாட்டுநெல்லு கொடுக்குகிறேன் கத்தாதே
சாம்பலைக் கொண்டு தன்வயலில் போட்டுவிடு

மழை பெய்யுமாவெனக் கேட்பதற்குச் சொல்லுதல்

நஞ்சை புஞ்சை யாவும் நல்லமழை யில்லாமல்
பயிர்வாட்ட மாயிருக்கும் பக்குவத்தைக் கண்டுவந்து
மழைபெய்யு மாவென்று மகிழ்ந்து குறிகேட்டாய்
சுக்கிர னஸ்தமானல் தொல்லுலகி லேதானும்
மழையென்ன மாய்ப்பெய்யும் வாட்டத்தை விட்டுவிடு
இந்தநல்ல மாத மியல்பாய்க் கடைசிதனில்
சுக்கிரனஸ் தம் நீங்கிச் சுகமாய் வெளிவருவான்
நல்லமழை பெய்யும் நாடுமிகச் செழிக்கும்
நஞ்சை புஞ்சை யுந்தழைக்கும் நல்லகண்மா யும்பெருகும்
பயிர்கள் செழித்துப் பண்பாக வேவிளையும்

கிணறு வெட்டுவதற்குச் சொல்லுதல்

நஞ்சைபுஞ்சை தன்னை நானும்போய்ப் பார்வையிட்டேன்
பயிர்செய்யத் தண்ணீர் பக்குவமில் லாததினல்
கிணறுவெட்ட வேண்டிக் கேட்டு வந்தாயென்னுசான்
தென்புரத்தில் தண்ணீர் தேடினே னிப்போது
கிட்டக்கிடைக்கவில்லை கீழ்புறத்திற் போய்நுழைந்தேன்
பாறையொன்று வந்து படர்ந்திருக்கு தென்னுசான்
வடபுறத்து மூலையிலே வாய்க்காது தண்ணீரும்
தைரிய முண்டானல் தான்வெட்டு நீகிணறை
வடகிழக்கு மூலையிலே வாய்த்திருக்கு தண்ணீரிப்போ
உதவி புரியுகிறே னுத்தமனே யஞ்சாதே
குலதே வதையைக் குறிப்பாக நீ நினைத்து
கிணறுவெட்டி னுயானல் கிளப்புமிதோ தண்ணீரும்
வேண்டும் பயிர்கள்செய்து விருத்தியுட னேயிருப்பாய்
சாம்பலை வாங்கித் தைரியமாய்ச் சென்றுவிடு

## நஞ்சை புஞ்சை நிலத்தைக் கொடுத்து விடுகிறதற்குச் சொல்லுதல்

ஆதிமுதல் வைத்திருந்த அரிதான நஞ்சை புஞ்சை
விற்பனை செய்ய மிகநினைத்து வைத்தகுறி
கண்டுகொண்டே னுந்தன் கருத்தும் வெளியாச்சு
அறிவு கலங்காதே ஆசானே யிப்பொழுது
காலக் கிரகம் கழுத்தில்வந்து நேர்ந்ததினால்
நஞ்சை புஞ்சை விற்று நமக்கிருந்த யீடுகடன்
தீர்த்து விடுவதற்கு திறங்கேட்டா யென்னுசான்
கிரகமோ போதாது கெம்பீர மாகவந்து
கடன்தீர வென்றால் கருத்தாக வேதானும்
இந்தச் சமைய மிதைக்கொடுத்து விட்டுவிடு
கோருங் கிறையங் குறைபாம லேகொடுப்பாய்
இவ்வருடம் போயி யிதற்கிரண்டாம் வருடமதில்
நல்ல நிலமாம் நஞ்சைபுஞ்சை நான்வாங்கி
தருகிறே னஞ்சாதே தானே யறிந்துகொள்வாய்

## மாடு வாங்கச் சொல்லுதல்

மன்னன் குறித்த மாடதனை வாங்குதற்கு
தெய்வத்தைக் கோறித் திடங்கேட்போ மென்றுவந்தாய்
நினைத்து வந்த மாடதுவும் நேராகத் தோணுதப்பா
எனக்கும் பிரியம் இம்மாடு வாங்குதற்கு
சுளிகளொன்று மில்லாத சுத்தநல்ல மாடிதுதான்
வாங்கினாற் றானும் வருகுமே செல்வமுந்தான்
லாபங் கிடைக்கும் நன்மையது உண்டாகும்
செல்வம் பெருகுஞ் செருக்கதுவு முண்டாகும்
குழந்தைகுட்டி யிப்போ கூடுதலா யுண்டாகும்
இப்போதே போய்நீ என்னுசான் வாங்கிவிடு
மாடு வீட்டுக்கு வந்த வுடனேதான்
மலைக்கு ஒருபணத்தை மகிழ்வாய் முடிந்துவிடு

## மாட்டுக்குச் சீக்குத்தீரச் சொல்லுதல்

நாலுகால் சாதி நடமாடுஞ் சீவனிப்போ
நின்றது நின்றுப்போற் நெடுமூச் சுடனேதான்
திக்குத் திக்கென்று திரும்பயிட மில்லாமல்

இருப்பதைப் பார்த்து யென்னுசான் வந்தாய்நீ
வழக்கம்போ லெந்தனுக்கு மாடுகன்று போட்டாக்கால்
பால்காய்ச்சி வைத்துப் படைத்துநீ வந்தாயா
மறந்துநீ செத்தால் வருமோ வுயிர்தானும்
என்குறையே யல்லாது ஏவல்பில்லி யில்லையடா.
எந்தமா டென்று யென்னைக் குறிகேட்டாய்நீ
மாடின்ன தென்று வகைவிபரஞ் சொல்லணுமோ
கட்டுத் துரைபார்த்தேன் கருப்புநிற முள்ளதுவும்
எருமைமா டாகுமென்று யெண்ணுதே யென்னுசான்
சிவப்புவெள்ளை சேர்ந்த சிவலைமா டானதும்
பசுவென்று சொல்லி பார்த்துவந்தே னிப்போது
காணிக்கை தன்னைக் கடனைச் செலுத்திவிடு
மஞ்சள் துணியில் வழக்கம்போ லென்பணத்தை
முடிந்து போட்டால்மாடு முன்போ லெழுந்திருக்கும்
சாம்பலைக் கொண்டு தான்போடு யென்னுசான்

திருட்டுப்போன மாடு விஷயங்களைச் சொல்லுதல்

யென்வீட்டி னுள் நுழைந்து யென்காலியைப்பார்த்தேன்
காலிக்கு வாட்டமென்று கதைசொன்னே னென்னுசான்
யென்ன வாட்டமென்று யென்னைக் குறிகேட்டாய்
சோரங் கலகமதாய்ச் சொக்கின பாவனையாய்
சோரம் நடந்துவிடச் சொற்பனமுங் கண்டேனுன்
யெந்தவிடம்போனதென்று யென்னைவருத்திக்கேட்டாய்
போன விடத்தைப் போய்ப்பார்த்தே னென்னுசான்
ஊருக்கு மேற்கே ஒருகாத தூரமதிற்
கொண்டுபோய் வைத்தான் குறிப்பாய் மலைதனிலே
முந்தாநா ளெல்லில் முதற்சாம வேளையிலே
மாடு தவறினது மன்னு மயங்காதே
ஈரிரண்டு நாளில் யென்மாடிருக்குதென்று
மச்சந் தருகிறேன் மயங்காதே யென்னுசான்
மாடு வருமா வாராதா வெனக் கேட்டாய்
கட்டுத் துரைசேர்ந்தால் கைக்குவளை போடுவையா
சேனங் குதிரையுடன் செல்லுகிறே னிப்போது
மாட்டைத் திருப்பி வருகிறே னென்னுசான்
மயக்கமினி வேண்டா மாடுகொண்டு நான்வாரேன்

மாடு விற்கிறதற்குச் சொல்லுதல்

மாடென்றும் ஆடென்றும் வகையுண்டே யென்றுசான்
அதிலே நல்லமாடு அதுவிற்கவே நினைத்தாய்
அதுவிபரந் தானும் அடைவாகச் சொல்லுகிறேன்
நல்ல பிராயத்தில் நமக்குழைத்துத் தந்ததது
பாதிவயதும் பக்குவமு மானதினால்
இதைக் கொடுத்து விட்டு இனிமையாய்ப் பின்னாலே
இளம்பருவக் கன்று இதமாக வேதானும்
பிடித்துத் தருகிறேன் பிரியமுள்ள கன்றதுவை
இந்தநல்ல மாட்டை யிப்போதே தந்திடுவாய்
மயிலை நிறமாய் வட்டநல்ல கொம்பதுவாய்
வாங்கிக் கொடுக்கிறேன் மன்னவனே அஞ்சாதே

பொங்கல் வைத்ததில் வந்தகுற்றஞ் சொல்லுதல்

தேவி பிரார்த்தனைக்குச் செய்கிற பொங்கலுண்டு
சாமி பிரார்த்தனைக்குத் தான்செய்யும் பொங்கலொன்று
கலியாணப் பொங்கல் கணக்காக வைப்பதுண்டு
ஆதித்தன் பொங்க லதிவிரைவாய் வைப்பதுண்டு
இந்தநல்ல பொங்கலிலே என்னகுறை நேர்ந்ததென்று
பாக்கிலைகள் வைத்துப் பரிவாகக் கேட்கவந்தாய்
சொல்லுகிறே னிப்போ சுருக்கமா யோர்வசனம்
குளித்து முழுகிக் குலவையிட்டுப் பானைதனை
எடுத்து வைத்துப் பொங்கலிட்டா லென்னகுறைநேரும்
ஒருகுறையும் வாராது உன்குலத்தி லேயொருத்தி
குறித்தீட் டுடனே குளித்து முழுகாமல்
பானையைத் தொட்டுவிட்டாள் பார்த்துமறியாமல்
எல்லாமுந் தொட்டு இருந்துமே பொங்கலிட்டாள்
அதனாலே யென்பானை அன்பாகப் பொங்காமல்
கொதித்தது பானை குறிப்பா யெடுத்துவிட்டு
விரைவாக வேகுளித்து வேறுபா னையெடுத்து
பாலுகளை விட்டுப் பண்பாகப் பொங்கல்வைத்தால்
மனம்போலே பானை மகிழ்வாகப் பொங்கிவிடும்

ஆடுவாங்கச் சொல்லுதல்

பட்டிபெருக்கிப் பார்த்திட வேண்டுமென்றும்
ஆடுகளை வாங்கி அதிஷ்ட மறிவமென்றும்
நினைத்து இப்போது நீபாக்கு வைத்தாய் நீ
மூன்று வருடத்திற்கு முன்னாக உன்கனவில்
ஆடுகளை வாங்க அன்பாக உந்தனிடம்
சொன்னேன துவுனக்குச் சோதிக்க வில்லையப்போ
இப்பொழுது நற்கால மியல்பாக வந்ததினால்
என்னிடத்தில் வந்தா யிதுவுன் னதிஷ்டமது
வந்ததி னாலே மகிழ்வாக யிப்போது
ஆடுகளை வாங்கி யன்பாகப் பட்டிவைப்பாய்
செல்வம் பெருகுஞ் சிவன்செயலு முண்டாகும்
கீர்த்தி பெருகுங் கீதாரி நீயாவாய்
ஆகையா லிப்போது அன்பாக நூறாடு
குறித்து வைத்துப்பார்த்த குறியுள்ள ஆடுதனை
வாங்கிவிடு இன்று மகராஜ னயிருப்பாய்
பட்டி பெருக்கிப் பால்கறந்து தாறேனான்

ஆடு விற்கச் சொல்லுதல்.

மன்னன் மகிழ்வாய் வைத்திருந்த ஆடுகளை
பால்பாக்கிய மிகுத்துப் பட்டி யிருக்கையிலே
ஊரி லிருக்கும் உற்றதொரு ஆடுகட்கு
எருக்குப் பிணிவந்து இயல்பாக வேசாடி
ஆடு மடிவதையும் அரச னுமே தான்பார்த்து
பட்டியி னுட்டைப் பரிவாய்க் கொடுத்துவிட
இலைபாக்கு வைத்து என்னைக்குறிகேட்டாய்
என்னுடைய பட்டியிலே எக்குறையும் நேராது
நாட்டுப் பிணியும் நம்மையொன்றுஞ் செய்யாது
படுசாவு சீக்குவந்தால் பார்க்க முடியாது
எனக்கு மனது இப்போது ஆடுகளை
விலைகள் விடாமல் விற்றுவிடு பின்னாலே
ஆடுகள் வாங்கி அன்பாகப் பட்டிவைத்து
பால்கறந்து நான்தாறேன் பாலன் மயங்காதே

### எருமைமாடு வாங்கச் சொல்லுதல்.

என்பிறவிக் கிப்போ இயல்பாக ஜீவனத்தில்
வரும்படி யில்லாமல் மனமயக்க முண்டாகி
எருமை நல்ல மாடு இயல்பாக வாங்கிவந்து
பாலைக் கறந்து பக்குவமாய்த் தான்கொடுத்து
அதில்வரும் லாபத் தடைந்து பிழைப்பமென்று
என்னைக் குறிகேட்டாய் என்பிறவி யிப்போது
என்வீட்டில் மாடு இதமாக வேணுமென்று
கம்பையின் தீர்மானங் கதறினேன் முன்னாலே
அப்போ நினைக்கவில்லை அடைவாய் மறந்துவிட்டு
இப்போ மாடுவாங்க இயல்பாக வே நினைத்தாய்
எனக்குமது வேபிரியம் இன்றேபோய்ப பார்த்துவைத்து
மாடதனைத் தான்பிடித்து மனைக்குவந்து நீசேரு
நினைத்தபடி பாலதனை நேர்மையுடன் றுன்கொடுக்கும்

### பசுமாடு வாங்கச் சொல்லுதல்.

மன்ன னாசனுக்கு வளர்பிள்ளை குட்டிகளும்
பால்கறந்து இப்போ பருகியே தான்குடிக்க
பசுமாடு வாங்கிப் பார்க்கவேணு மென்றேதான்
சாமி யிடத்தில் தான்கேட்போ மென்று வந்தாய்
பெரிய குடும்பமென்று பேரிருக்கும் வீட்டினிலே
தயிர்மோரு பாலுக்குத் தான்கேட்ப மென்றுவந்தாய்
என்வீட்டில் மாடு இதமாக வேயிருந்தால்
பால்கறந்து யானும் பக்குவமாய்ச் சாப்பிடுவேன்
ஆகையினாலே அடைவாக யிப்போது
குறித்துமே பார்த்த குறிமயிலை மாடதனை
கேட்ட பணங்கொடுத்துக் கிருபையுட னேபிடித்து
வீட்டில்வந்து கட்டிவிடு வேணுமென்ற பால்தருவேன்

### பலவித செய்கைகளைச் சொல்லுதல்.

வீட்டில்நடந்த விச்சித் திரமோதான்
காட்டில் நடந்த காரணமோ வேறுளதோ
பெண்களை நோங்கிப் பேசிவந்த காரியமோ
வங்கணக் காரன் மதிமோசஞ் செய்ததுவோ
போக்குவரத் தாயிருந்து போன சினேகிதமோ

பிணக்குகள் வந்து பெரியசண்டை யானதுவோ
சொற்பனத்திற் கண்ட துயரமோ அல்லதிப்போ
கருப்பனுட கோட்டாளை காட்டினதோ மக்களுக்கு
நச்சுக் கெவுளியினால் நல்வாட்டங் கண்டதுவோ
நேர்த்திக் கடனால் நேர்ந்தவிஷ யந்தானோ
கம்மாளன் சேய்பணிதிக் காரணமோ யானறியேன்
கொடுத்து வைத்த பொருளில் குற்றங்கள் நேர்ந்தனவோ
சேலைதுணி வேட்டியினில் தீப்பிடித்து வந்ததுவோ
பாலினிற் சோரம் பார்த்திங்கு வந்ததுவோ
மனையிலே மோசம் வந்தது நடந்ததுவோ
கைப்பொருள்கள் போன காரணமோ இன்னமுந்தான்
மாடாடு சேதங்கள் வந்ததுவோ கன்னிகைக்கு
வாட்டங்களேதுமுண்டோ மகனுற் கிலேசமிதோ
வேட்டைக்குப் போயி விருதுபெற்று வாரதற்கோ
கால்கையிற் குற்றம் கண்களிற்கோ ளாறுமுண்டோ
அடிதடிச் சண்டைகளில் அதிதீங்குண் டானதுவோ
உடம்பு வியாதிகளை உற்றுணர வந்ததுவோ
புருடன் பெண்சாதிக்குப் போர்கள் நடந்ததுவோ
நகைகளை விற்றுடனே நற்கடனைக் கட்டிடவோ
வெள்ளாண்மையில்நோவு விழுந்ததுவைக்கேட்பதுவோ
பயிரிற் புழுப்பூச்சி பண்பாய் விழுந்ததுவோ
சில்லரைவி யாபாரஞ் செய்ய நினைத்ததுவோ
நகைகள் கிரையத்திற்கு நலமாக வாங்குதற்கோ
என்னவித மென்று இக்குறியைச் சொல்லிவிடு

வருடா வருடம் புரட்டாசி மாதம்,
மீனாட்சியம்மன் கோவிலில் நவராத்திரிக்கொலுவின்போது
பேயோட்டுகிற வர்ணிப்பு.

தேவி திரும்பு திரிபுரையா ளெந்திரியே
மாதுதிரும்பாயா மணவாளன்றேணலையா
மாதைத்தொடர்ந்தவனை வாக்கருள வேணுமம்மா
நாலாந்தலமாம் கோபுரத்தைக்காத்த நல்லமுனியையா நீ
கோபுரத்தைக் காத்த கொத்தளத்து மாமுனியே
கண்ணாலே நீபார்த்து மனவருத்தந்தீரகருணையுடனிரங்கி

O-,B,K N53
114149

காசிராஜன் பெற்ற கண்மணியே வீரையனே
மாதைத் தொடர்ந்த வல்லவா சொல்லேநீ
தண்ணீர்மயக்கமா சமர்த்தன் வெளிபோருயா
கெந்துகால் நொண்டி கிடந்துருளுஞ் சப்பாணி
வாதக்கால் நொண்டி வலதுகால் சப்பாணி
மாதைத் தொடர்ந்த வகைசொல்ல வேணுமிப்போ
கன்னியைத் தொடர்ந்த கட்டழகா சோணைமூத்தே
ஆதிநிலையு மடியேன்றனக்கு அருள்புரியவேணுமையா
மட்டஞ் சிசுவில் இந்த மங்கைவிளை யாடயிலே
மாதும் பயந்தாள் மாமுனியுந் தான்தொடர்ந்தார்
தொடர்ந்த வழியுமிப்போ தோன்றவில்லை யெந்தனுக்கு
பருவமுந்தானுகி பக்குவமுமாகி பயிர்பலனில்லாதபடி
மாது மலடாக வைத்திருக்கக் காரணமேன்

மீனாட்சியைத் துதித்தல்.

என்ன விதமென்று தேவியிடமிதுவியாங் கேட்பமென்று
அம்பிகைமீனாட்சி என்னைப்பெற்றஅம்மைகாமாட்சியரே
உன்னுடைய கோவிலிலே உட்கார்ந் திருக்குதம்மா
கண்பார்த்தருள்புரியும் என்தேவி காத்து ரட்சித்திடுவாய்
கண்மாய்க் கரையும் கரையில் புளியடியும்
ஆலமரமும் அழகான தோப்புகளும்
விட்டுவெளியேராயா உனக்கு வேண்டியதோர்சாமான்கள்
கொண்டுவந்து நான்தாரேன் குழந்தை மயங்காதே
சாமிதிரும்பு எனையாண்ட தங்கம்வெளி யேருயா
பாலன் துயரம் ருத்திரகளப்பூமி பார்முழுதுங்கேட்கலையா
குழந்தை வருந்துவது உன்கொடுமுடிக்குங் கேட்கலையோ
பம்பைமுழங்குது என்னைப் பெற்றபாப்பாத்தியெந்திரியே
பம்பையைவிட்டு மூத்துராக்கு பதறிவெளி யேருயா
மாணிக்கக் கொண்டை மடியிற் புரளலையா
ஆடத் தெரியாமல் அறிவுகெட்டா போனுய்நீ
சுத்தத் தெரியாமல் சுணைகெட்டா போனுய்நீ
இடமும் வலமும் இருபுரமுஞ் சுத்தவில்லை
மாலை துலுங்க மயிரவிழ்ந்து ஆடலையே
கதம்ப மணக்கலையே பூமியிற் கைபோடக் காணலையே

எட்டிப் பிடிக்கலையே இருபுரமுஞ் சுத்தலையே
தொட்டால் விடாத தொட்டியப் பிசாசே நீ
கட்டையிலுங் கட்டையிது கருவேலங் கட்டையா நீ
தேரோ அலங்காரம் தெருவெல்லாம் சிங்காரம்
தலையை விரிக்கலையா சற்றுநேரம் ஆடலையா
சுத்தத் தெரியாமல் சுணைகெட்டா போனாய் நீ
மாதிடத்திற் சென்ற மன்னவா செஞ்சடையே
பாண்டி வளநாடு பழமதுரை நன்னாடு
தண்ணீர்க் கரைக்குத் தங்கைவரும வேளையிலே
செட்டிப் பெண்ணென்று தேடிச் சிறையெடுத்தாய்
பாப்பாரப் பெண்ணென்று பார்த்துஞ் சிறையெடுத்தாய்
கம்மாளப் பெண்ணென்று கருத்ச் சிறையெடுத்தாய்
அகம்படியப் பெண்ணென்று அறிந்து சிறையெடுத்தாய்
மிராட்டியப் பெண்ணென்று வேண்டிச் சிறையெடுத்தாய்

வருந்தியழைத்தல்.

எத்தனை நாள் கத்துவது இரங்கலையா செஞ்சடையே
காணக் கிடைக்கலையே கண்ணுக்குத் தோணலையே
இல்லாத நாடு இருட்டுநாடாகுதம்மா
இடுப்பை யொடிக்கலையே இருபுறமுஞ் சுத்தலையே
மாது தலைவிரித்து மனம்போலே ஆடலையே
அஞ்சுசடை கொஞ்சிவர அழகுசடை மார்புரள
கொஞ்சுசடை பின்னலிட நீகோலா கலமாக
சித்துவிளையாடே பம்பைவிரித்து ஜோக்காகஆடாயோ
வந்திட்டான் வந்திட்டான் மார்நாட்டுப் பொன்கருப்பு
இனியேல் மயக்கமில்லை எனக்கு வருத்தமில்லை
புத்திமயங்காதே போகாதே நீதானும்
சத்தியமாகத் தான்சொல்லு ஓர்வசனம்
வார்த்தை ரெண்டு சொன்னால் வம்புதும்பு செய்வதில்லை
பார்த்து ஆலோசித்துப் பகர்வா யொருவசனம்
என்றுதான் கேட்கப் பெண்ணாளும் ஏதுசொல்வாள்
இந்தப் பெண்மேலே இருந்தேன் பிரியமதாய்
இருந்தே யெனைவிரட்ட என்னை நினைத் தாய்பயலே
வங்கொலையால் மாண்ட இம்மாதைத்தொடர்ந்தவன்யான்

எந்தவூர் சொல்லென்று என்னை மறுத்துக்கேட்டாய்
ஊரின்பேரென்னவென்று உண்மையுடன் கேட்டதினால்
சொல்லுகிறே னிப்போது துரைமகனே நீகேளு
கூடைத்தேங்காய்பழமும் கொண்டுவந்து வைத்தபின்னு
இருபத்தொரு பணமும் இயல்புடனே வைத்தாக்கால்[ம்
போறேனிதோவெனவேபுன்சிரிப்புக்கொண்டுசொல்லும்

பிசாசுவிட்டு விலகுதல்.

காடுஞ்செடியுங் கண்மாய்க்கரையும் கரிசக்குளத்தருகே
ஆலமாமுஞ் சோடிரெண்டாக அருகே புளிமரத்தில்
இருந்தேன் வெகுநாளா யேனென்று தேடவில்லை
இந்தமங்கை தானும் இவள்வருகும் போதினிலே
அன்றேயோர் போடா யறையவெழுந் தேன்மதுரை
குன்றைநிகரு மொட்டைக் கோபுரத்தான் மன்ருடி
வேண்டினதி னுலுமுயிர் வேதனை செய்யாதுவிட்டு
தாண்டியிந்த மாதைத் தொடர்ந்தேனு னன்றுமுதல்
பாப்பாரப் பெண்ணென்று பார்த்துப் பிடித்தேனுன்
அம்மாளுடைய ஆக்கினை யின்படியே
போறேன்போறே னெனவும் பொறுக்கமுடி யாதெனவும்
என்றுநான் சொன்னவுடன் இயல்பாக வேகுவித்து
சூடனைக் கைவாங்கி சொன்னுளே போறேனென்று
போறேன் போறேனெனவே போனுனே சக்கிலியன்
இந்தமங்கை தன்னை இனிநினைக்க மாட்டேனென்று
முடிவாங்கு மென்று முடிபிடித்துத் தான்கொடுத்து
போனது பிசாசு மங்கை பொற்றுமரை மூழ்கி
மங்கைநல்லாளும் அம்பாளை மனதில் மிகநினைத்து
போனுளே வீடுதனிற் புருடனுடனே கலந்தாள்
சக்கிலியன் நீங்கியதால் தலைமகனைப் பெற்றெடுத்து
சுகசீவியாய் மக்கள்பெற்றுச் சுகமாக வாழ்ந்திருந்தாள்

ஆரக்கட்டி விபூதி கொடுத்தல்.

வடதிசை கட்டுதல்.

வடதிசையி லுள்ள மாதுநல்லாள் செல்லாயி
எடுத்ததொரு காரியங்க ளியல்பாய் முடிப்பதற்கு

மாற்ருன் கெடுதி வந்திடவுங் கூடாது
தெய்வக் கெடுதி சேர்ந்திடவுங் கூடாது
மலையை வணங்கி மாலேதான் தஞ்சமென்று
படிவாசல் முத்தன் பாதமதை நான்பணிந்து
சாம்பல் கொடுத்தேன் தற்காத் தருள்புரிவாய்

O-,8,K
N53

கீழ்திசை கட்டுதல்.

கீழ்திசையைக் காத்த கிருபையுள்ள மாரிமுத்தே
வாக்குக் கொடுத்து மகிழ்ந்திருக்கச் செய்தவளே
வைத்தகுறி பைசல் வாகாகச் சொல்வதற்கு
உற்ருர் பகையும் ஊர்ப்பகையும் வாராமல்
மாடன்கெடுதி வந்திங்கு நேராமல்
எதிராளி வந்து என்னை மறிக்காமல்
வாக்குக் கொடுத்து மகிழ்வாய்சாம் பல்கொடுத்தேன்

தென்திசை கட்டுதல்.

தென்திசை யுள்ள சீரான காளிமுத்தே
உன்னை வணங்கினேன் உமையாளைத் தஞ்சமென்றேன்
சத்திராதி வாராமல் தற்காத்து நீயிருப்பாய்
இப்போது உன்குடிக்கு ஏதுகுறை நேராமல்
சோணைமுத்து வந்தென் துரைமகனே காத்தருள்வாய்
திசைகாத் திருக்குந் தேவி பறையருளால்
விபூதிப் பிரசாதம் வாங்க விரும்பியிங்கு வந்தேனுன்

மேற்றிசை கட்டுதல்.

மேற்றிசையி லுள்ள வீரமுள்ள பேச்சிமுத்தே
முடிவணங்கி தெண்டனிட்டேன் முக்காலுங் காப்பாற்று
மதுரைவீரன் பகைகள் வாராமற் காருமம்மா
வயிரவன் காவல் மாருது தானிருக்க
ஏவல் கருப்பு இடையூறு செய்யாமல்
விபூதி யெடுத்து வேண்டிக் கொடுத்தேனுன்
வாழி மிகவாழி மறைநாலும் வாழியதே.

114149

கோடாங்கிமாலை முதற்பாகம்

முற்றிற்று.

உ

பரமபதி துணை.



ஐயா, இந்த முதற்பாகம் கோடாங்கிமாலையில் குறிசொல்லி ஆரக் கட்டி விபூதிகொடுக்கிற வரையிலுஞ் சொல்லியிருக்கிறது. கோடாங்கி மாலை இரண்டாம் பாகத்தில் முத்துக்குறி சோதிடமும் பன்னிரண்டு ராசிகளின் ஆரூடமும், குறிசொல்லுகிற வல்லபமும், பேய்பிசாசு விரட்டுதலும் அதுகளுக்கு பூசையிடு முறையும், அதற்கு வேண்டிய மந்திர சக்கரங்களும், அஷ்ட திசை கட்டி விபூதி கொடுத்து குணப் படுத்துகிற முறைகளையுஞ் சொல்லியிருக்கிறது.

பாகம் 1க்கு விலை அணா 0—8—0

## சோலைமலை பெரிய அழகர் வர்ணிப்பு.

இதில் சோலைமாமலையி லெழுந்தருளி யிருக்கும் அழகமலையாண் டாரின் அலங்காரச் சிறப்பும் குதிரையின் அலங்காரச் சிறப்பும், மலை விசேடமும், தீர்த்த விசேடமும், பதினெட்டாம்படி விசேடமும், மதுரைக்கு வந்து வண்டியூர் சென்று திரும்பவும் அழகமலைபோகும் வரை பூருவும் வர்ணிப்பாகப் பாடியிருக்கிறது. விலை அணா 0—8—0

## இ. ராம. குருசாமிக் கோனார் சன்

புத்தகசாலை புதுமண்டபம் மதுரை.

ஸ்ரீ ராமச்சந்திர விலாசம் பிரஸ் மதுரை. காப்பி 500. 53

## விளம்பரம்.

| | |
|---|---|
| பெரிய அழகர் வர்ணிப்பு | 0 8 |
| சிறிய அழகர் வர்ணிப்பு | 0 3 |
| பெரிய பாகவத வர்ணிப்பு | 0 12 |
| கிருஷ்ணவதாரன் வர்ணிப்பு | 0 3 |
| மாபாவதாரன் வர்ணிப்பு | 0 3 |
| தசாவதார வர்ணிப்பு | 0 3 |
| பாண்டி முனி வர்ணிப்பு | 0 2 |
| கோடாங்கி மாலை 1-வது பாகம் | 0 8 |
| டிை 2-வது பாகம் பனிரெண்டு ராசி மூத்துக்குறி சேர்ந்தது | 0 8 |
| வீமன் சண்டை வர்ணிப்பு | 0 2 |
| கிருஷ்ணன் தூதுக்கும்மி | 0 2 |
| இராமாயணக் கும்மி | 0 4 |
| ருது நூல் சாஸ்திரம் | 0—3- |
| கந்தரனுபூதி மூல மந்திர சக்கரத்துடன் | 0—8- |

மேற்கண்ட புத்தகங்களும் இன்னும் மற்ற வேண் தினுசுகளும் நேரிலும் வீ பீ தபால் மூலமாகவும் பெ றுக்கொள்ளலாம் கியாட்லாக் வேண்டுவோர் விலா தெரிவித்தால் அனுப்பக்கூடும். இப்படிக்கு.

குரு. இராமசாமிக் கோன்

புத்தகசாலை, புதுமண்டபம் மதுரை.